உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௬] பிரமாதி ௵ புரட்டாசி ௴ [பகுதி-௧௧.

Vol. 36. *September—October 1939.* No. 11.

கம்பராமாயண சாரம்.

[௬௩௦-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இராவணன் உலகஞ்சிரிப்பதைப் பொருட்படுத்தாமல் சீதை சிரிப்பாளேயென்று நாணி வருந்தல்.

61 வானகு[1] மண்ணு மெல்லா நகுநெடு[2] வயிரத் தோளான்[3]
நானகு பகைஞ ரெல்லா[4] நகுவரென் றதற்கு நாணான்
வேனகு நெடுங்கட் செவ்வாய் மெல்லியல் மிதிலை வந்த
சானகி நகுவ ளென்றே[5] நாணத்தாற் சாம்பு கின்றான்.

கொண்டுகூட்டு: *நெடுவயிரத் தோளான், 'வான் நகும், மண் எல்லாமும் நகும், நான் நகு பகைஞரெல்லாம் நகுவர்' என்று (எண்ணி, அவர்கள் நகும்) அதற்கு நாணான். வேல் நகு நெடும் கண், செவ்வாய், மெல் இயல் (உடையவளாய்) மிதிலை(யில்) வந்த சானகி நகுவள் என்று (எண்ணி) நாணத்தால் சாம்புகின்றான்.*

பொருள்: *இராவணன், '(என் தோல்வி காரணமாக என்னை நோக்கி) விண்ணோர் (எல்லாரும்) சிரிப்பார்கள். மண்ணோரெல்லோரும் சிரிப்பார்கள். நான் (வென்று அவமதித்துச்) சிரித்த*

(மண்ணிலும் விண்ணிலும் உள்ள என்) எதிரிகளெல்லாரும் (என்னை இகழ்ந்து) நகைசெய்வார்கள்' என்று எண்ணி அவர்கள் (எல்லாரும்) சிரிப்பதற்கு நாணுமைச் சானகி (ஒருத்தி) சிரிப்பா ளென்பதற்கே (கொண்ட) நாணத்தினுல் மனம் வாடுதலடைந்தான்.

வயிரநெடுந்தோளான் - வயிரம்போன்ற (உறுதியுடைய) பெரிய (இருபது) தோள்களையுடையவனுன இராவணன். வான் - விண் - விண்ணோர். (ஆகுபெயர்.) நகுதல் - (பரிகசித்துச்)சிரித்தல். மண் - மண்ணிலுள்ளார். (ஆகுபெயர்.) வேல் நகு கண் - வேல்போன்ற கண். நகு, உவமவுாசகம். மாதர்கண்ணும் வீரர்வேலும் வடிவ ஒப்புமையுடையன. வீரர்வேல் பகைவரைத்தாக்கித் துன்புறுத்தல்போல, மாதர்கண் அவரை அடையாத காதலரைத் தாக்கித் துன்புறுத்துமென்பது கவிமரபு. இதுபற்றி, 'வேல் நகு கண்' என்பதற்குத் துன்புறுத்துதலில் தனக்குக் குறைந்த வேலை அவமதித்துச் சிரிக்கின்ற கண் என்று பொருள்கூறலுமாம். மெல் இயல் - மென்மையான தன்மை. சாம்புதல் - வாடுதல். நெடுங்கண்ணையும் செவ்வாயையும் மெல்லியலையும் உடைய சானகி யென இயையும்.

'மிதிலைவந்த சானகி' என்பதற்கு, மிதிலையில் சனகராசன் யாகசாலைத் தரையைப் பண்படுத்துதற்காக உழுத படைச்சாலில் வெளிப்பட்ட பூமி தேவியின் அவதாரமான சீதையென்று பொருள்விரித்துரைக்கலாம்.

இராவணனுக்கு முக்கிய லட்சியம்; சீதை தன்னை மதிக்க வேண்டுமென்பது. ஆதலால், மற்றெல்லார் அவமதிப்பினுலும் வாட்டமுருத அவன்மனம், சீதை அவமதிப்பளென்பது ஒன்றே காரணமாக வாடலுற்றதென்ருர்.

பாடபேதம்:—[1] வானமும். [2] மணி. [3] கையான். [4] யாரும். [5] நகுவளென்று, நகுமென்றுள்ளம்.

மாலியவான் இராவணன்வாட்டத்துக்குக் காரணம் வினவுதல்.

[அப்போது, இராவணனுடைய பாட்டனுன மாலியவான், வந்து, பேரனுடைய படுக்கைக்குப் பக்கத்தில் மெத்தையிட்டிருந்த ஆசனத்திலே இருந்து, அவனுடையநிலைமையை உற்றுப் பார்த்துத் தெரிந்து 'அப்பா! போரிலே தோற்ருய்போலும், உள்ளமும் உடலும் வாடியிருக்கின்ருயே. நிகழ்ந்த செயல் யாதோ?'

என்று கேட்டான். துன்புற்ற நெஞ்சும் (கோபத்தீப்) பற்றியெரி கின்ற கண்ணும் தீக்காற்றை வீசும் உலைமூக்குப்போலத் தீமுச் செறியும் மூக்கும்,

*நவையறு பாகை யன்றி அமுதினை நக்கி னாலும்
சுவையறப் புலர்ந்த நாவான் †இனையன சொல்ல லுற்றான்

என்றவாறு, (நினைந்தால் நாவில் உமிழ்நீர் ஊறச்செய்யும்) தீம்பாகே யன்றி, அமுதத்தையே நக்கினாலும் சுவை உறைக்காதபடிஉலர்ந்த நாக்கும் உடையவனான இராவணன் பின்வருமாறு பேசுவானானான்.

இராவணன் தான் வாடினதற்குக் காரணம் கூறுவானாய், இராமன்போர்த்திறமையைப் புகழ்தல்.

'போருக்குப் பொருத்தமற்றவர் தவசிகள்; அப்படிப்பட்ட இரண்டு தவசிகளோடு (எண்ணிறந்த) நாங்கள் போர்தொடங்கவே, (அதைப் பார்த்தற்குத்) தேவர்கள்(விண்ணிலே)வந்து கூடினார்கள். அந்தப் போர்க்களத்திலே, நம்முடைய குலத்துக்குக் குறைவாகத் தோல்வி நேர்ந்தது: (கேவலம், மனிதருக்குத் தோற்றோமென்ற) பழியும் விளைந்தது. (அவர்கள் வீரத்தை யென்னென்பேன்!) தம்பி அம்பெய்வானானால், மூன்று கண்ணுடைய சிவன்முதலாக மூன்றுலகத்தோரையும் போர்த்துணையாகப் பெற்றாலும், நம் பெருஞ்சேனை அவன் ஒருவனுக்கே பற்றாது. அண்ணன் எண்ணற்ற வெள்ளக்கணக்கினரான இராக்கதருயிரைப் பறித்தபோது, அவன் நிலைமை, அவன் பாலப்பருவத்தில் விளையாட்டாகக் கூனி கூன்போக மண்ணுருண்டையைச் சிறுவில்லினின்று தெறித்த போதிருந்த நிலைமையை ஒத்திருந்ததேயன்றி, கோபத்தோடு கூடியிருந்ததாகக் கூறுதற்கில்லை. (இது எப்படியென்றால் அபலை யான ஒரு சிறுபெண்ணோடு விளையாடுங்காலத்திற்போலவே, அதி பலசாலிகளான எண்ணிறந்த பெருவீரர்களோடு போராடுங்காலத் திலும், 'இத்திருத்துறந் தேகென்ற போதினும்—மெய்த்திருப் பதம் மேவென்ற போதினும்—ஒத்திருந்த முகத்'தையுடையவ னாகவுள்ள இராமனுக்குக் கோபமுண்டாகவில்லையென்றபடி.) இரு நூறுவெள்ளங்கொண்ட சேனைகளெல்லாவற்றையும் கொன்ற

---

* நவையறு—குற்றமற்ற. † இனையன—இத்தன்மையானவைகளை,

இராமபாணங்களெல்லாம், இராக்கதரையோ, யானைகளையோ, குதிரைகளையோ தாக்கியபோது, தலைகளைத் தாக்கினவேயன்றி, ஓரம்புகூட உடலைத் தாக்கினதில்லை. தலைகளையே குறிகளாகத் தாக்கின அந்த அம்புகள், உலகங்களையெல்லாங்கடந்து, அப்பாலுஞ் சென்றுகொண்டேயிருக்குமேயன்றி, ஊழிசென்றாலும் ஓயுமென்று உரைக்கவொண்ணாது. அந்த அம்புகள் 'ஊழித்-தீயையும் தீக்கும், செல்லும் திசையையும் தீக்கும், செப்பும் வாயையும் தீக்கும், உன்னி(ன)ல் மனத்தையும் தீக்குமன்றோ.? அந்த அம்புகள், மேருவைப் பிளக்கவேண்டுமென்றாலும் விண்ணைக் கடக்கவேண்டுமென்றாலும் பூமியை உருவவேண்டுமென்றாலும் கடலைப் பருக வேண்டுமென்றாலும் எல்லாஞ் செய்துவிடும். அவைகளின் ஆற்றலுக்கு ஒரு மேரு, ஒருவிண், ஒருபூமி, ஒருகடல் போதா; 'அனந்த கோடி—மேருவும் விண்ணும் மண்ணும் கடல்களும் வேண்டுமன்றே; (கண் மூடி விழிக்குமுன் மிகுவிரைவாக) இராமன் வில்லை வளைத்தலும் நாணைப்பூட்டலும் அம்புகளைத் தொடுத்தலும் விடுத்தலுமாகிய செயல்களொன்றையும் (கண் இமையாத) தேவர்களே காணுமென்றால், அவன் விரைவுமிகுந்த விற்றொழிற்றிறத்தை வேறு யார் அறிவார். (இறைவன் சங்கற்பமாத்திரையானே பிரபஞ்சசிருட்டி நிகழ்தல்போல,) இராமன், 'இந்த அம்புகள் இராக்கதரையெல்லாம் கொல்லுக' என்று எண்ணினமாத்திரத்திலே, இரணகளமுழுதும் அம்புமயமாகிவிடுகின்றது.

வேதம் உண்மைதவறினாலும் தம்குறிதவறாத அந்த அம்புகள், கவிஞர்நாவினின்று தடைப்படாது தொடுத்து வெளிப்படும் பொருள்பொதிந்த சொற்கள்போலவும், அச்சொற்களாலாகிய செய்யுள்களில் உள்ள தொடைகள்போலவும், அத்தொடைகளின் இசைகள்போலவும், அவ்விசையமைந்த செய்யுளை அலங்கரிக்கும் அணிகள்போலவும் சிறந்துவிளங்குகின்றன.

இந்திரன் வச்சிராயுதமும் ஈசன் சூலாயுதமும் திருமால் சக்கராயுதமும் முதலிய படைக்கலங்களை அலட்சியமாகப் பொறுத்தயான், இராமன் அம்பைப் பொறுக்கமாட்டாது வருத்தமடைந்தேன். அந்த அம்புகள் சென்ற இடங்கள், கிழக்கோ மேற்கோ,

தெற்கோ வடக்கோ, மண்ணோ விண்ணோ, எங்கோ என்று தெரிய மாட்டாது திப்பிரமைகொண்டு திகைத்தேன். இந்திரன் இரண்டு தோள்களும், ஈசன் எட்டுத்தோள்களும் மாயவன் ஆயிரந்தோள்களும் இராமன் (சிறு) விரலொன்றுக்கே ஆற்றா. போர்க்களத்திலே வீறிப் பொலிந்துவிளங்கிய இராமனது திருமேனியழகையும் சேவகத்திறமையையும் சீதை கண்டாளானால், அவளால் நானும் காமனும் நாயென மதிக்கத்தகுவோமாவோம். எனக்கு இறுதி, இந்திரன் பிரமன் மாயன் ஈசன்போன்ற எளியோராலன்றி, இத்தகைய வலியோனால் நேரப்பெற்றது நல்லதே' என்று தான் இறக்கும்படியிருப்பதை இராவணன் தெரிவித்தபோது, மாலியவான் கூறுகின்றான்.

மாலியவான் முடிவுகூறுதல்.

'இவ்வாறு நிகழுமென்று நான் முன்னே சொன்னபோது என்னைச் சினந்தாய்! விபீடணன் கூறிய நன்மதியை இகழ்ந்தாய். விளையப்போகும் விளைவுகள் இவையென ஓர்ந்துணர்ந்து உண்மையான உறவினர் உரைப்பது மனத்துக்கு வருத்தத்தைவிளைப்பதாயிருந்தாலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதென்று ஏற்றுக்கொள்ளுதலை விட்டு, இகழ்ந்துதள்ளுதலைச்செய்தாய்.

'எண்ணிறந்த சுற்றத்தாரையும் இனிய நட்பினரையும் பெருஞ்சேனையையும் கல்விச்செல்வம் பொருட்செல்வம் இரண்டையும் இகழ்ந்துவிடுவாயாயினுய்' என்றான்.

மாலியவானை மறுத்து மகோதரனுரைத்தல்.

அப்போது, (சிறிதுதூரத்தேநின்று இராவணனிலைமையை நோக்கிக்கொண்டிருந்த) மகோதரன், வந்து, மாலியவானைச் சினந்து பார்த்து, 'இப்படிக் குறைகூறலாமோ' வென்றுகூறி, இராவணனுக்கு ஓய்ந்து ஒடுங்கிய உள்ளம் ஊக்கமுறும்படி உரைப்பானானான்.

'இது நல்லதென்று ஒருசெயலை மேற்கொண்டால், அதனால் வெற்றிநேருமாயினும் தோல்வியுடன் உயிரிழத்தல்நேருமாயினும் இரண்டையும் பொருட்படுத்தாமல் தாம் மேற்கொண்ட அந்த

ஒருசெயலைத் தளராது மேல்நடத்துதலே உத்தமர்க்குரியது. அச்செயலைக் கைவிட்டுப் பின்னடைபவன், உடனே பழியும் அப்பால் நரகமும் அடைவான். "வென்றவர் தோற்பர்; தோற்றவர் வெல்வர்; உயர்ந்தவர் தாழ்வர்; தாழ்ந்தவர் உயர்வர்; இது உலகத்தில் நடக்கும் முறை" யென்று அறிஞர் கூறுவர்.

உன்னுடைய வல்லமைக்கு எல்லையில்லை. புகழின் உச்சிமேலிருக்கும் நீ, அற்பத்தவசிகளிருவர்போரைப் புகழலாமோ! (தோற்றவர் வெல்வரென்று அறிஞர்கூறுமாறு, இன்று தோற்ற நீ, நாளை வெல்வாய்; தோற்பாயானால், அப்போது) செய்யத்தக்கவை இரண்டே. ஒன்று தேவியைவிடுதல் (இதனால் என்றேனும் இறக்கும் ஆவியை நிறுத்தலாம்). மற்றொன்று ஆவியை விடுதல் (இதனால் என்றும் இறவாத புகழை நிறுத்தலாம்): என்று துணிந்து செயலறுதற்குக் காரணமான இந்தக் கவலையையொழிப்பாயாக. இனிப் போர்புரியாது சற்றே தாமதிப்பாயாயின், குரங்குகள் பழங்கள் பழுத்த மரங்கள்மேலேறிப் பழம்பறித்துண்ணல்போல, நம்மேலேறி உயிர்பறித்துண்டுவிடும், கும்பகருண (னை மலையி) னை நோக்கப் புல்நுனிப் பனித்துளிகள்போலும் மனிதரைப் பொருட்படுத்தி, ஏனோ, அந்தக் கும்பகருணனை இகழ்ந்தாய்? அவனை அழைத்து ஏவுவாயானால், மலையேபோன்ற அவன்மேனியைக் கண்டமாத்திரத்திலே இராமலக்குமணர் ஓடியொளிப்பார்கள், ஒருகால் எதிர்வாரானால், எளிதாக அவர்களுயிரை வாங்கிவிடுவான் அவன்' என்றான் (மகோதரன்).

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்.

(கலைமகள்கழுத்தணி)

[௩௩-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

16. அரீதி(மத்). [-வசனநடை சரியாயில்லாதது]

குணாநாஂஷ்ட்யஸ்யேதயத்ர ஶ்லேஷாதீநாஂ விபர்யய꞉ ॥ ௨௮ ॥
அரீதிரிதி ப்ராஹு꞉........................

சிலேஷம் முதலிய குணங்கள் மாறுபட்டுக்காணப்படுதல் (-வைதருப்ப கௌட நெறிகளில்லாமை) அரீதி என்று கூறுவர்.

.... தத்ரைவ ப்ரவக்ஷ்யதே ।
ஶப்தார்த்தோபயயோகஸ்ய ப்ராதாந்யாத்............

I சொற்பற்றியதும், II பொருள்பற்றியதும், III சொல்லும் பொருளுமாகிய இரண்டையும் பற்றியதும்: ஆகிய மூன்றுவகையே முக்கியமானவையாகையால் அவ் 'அரீதி' என்னுங் குற்றத்தை இம் மூன்றுவகையேயாகப் பிரித்துக்கூறுவர்.

1 சொற்பற்றிய அரீதி.

............................வ்யஸ்தம் த்ரிதா ॥ ௨௯ ॥
ஸகுணா ஶ்லேஷாதியோகேந வாக்யேஷ்வேவோபஜாயதே ।
அத்ர ய꞉ ஶ்லேஷஸமதாஸௌகுமார்யவிபர்யய꞉ ॥ ௩௦ ॥
ஶப்தவ்யாநாம் ஸாஹஸ்த்ரரீதிரிதி தூஷணம் ।

முதலில் மூன்றுவகையாக வகுக்கப்பட்ட 'அரீதி' என்னுங் குற்றத்தில் ஒவ்வொருவகையும் மும்மூன்றுவகைப்படுவனவாம். அவற்றுள், 'சொற்பற்றிய அரீதி' என்பது, சிலேஷம் ஸமதை ஸௌகுமார்யம்: என்னும் மூவகைக் குணங்களொடுமாறுபடுதலால் மூன்றாகும்.

[அக்குற்றமுள்ளதொடர்கள் சிதிலம் விஷமம் கடோரம் என்பன.]

(1) சிதிலம்.

௩௱,

விபர்யயேண ஶ்லேஷஸ்ய ஸந்தர்ப: ஶிதிலோ மத: ॥ ௩௧ ॥

மேற்கூறிய வகை மூன்றனுள் சிலேஷம் என்னும் குணத்தொடு மாறுபட்ட (-நெகிழிசையுடைய) வாக்கியம் சிதிலம் எனப்படும்.

உதாரணம்:—

ஆலீயம் மாலதீமாலாலோலாலிகலிலா ஸகீ ।
நிபிடபத்ரிமே உன்மூலயத்யாஶு மநோ வநே ॥

மாலதிமலர்மாலையிற் சூழ்ந்து திரியும் வண்டுகளால் மொய்க்கப்பட்ட இந்தத்தோழி, பச்சிலைமரங்களால் இருளடைந்த கானகத்தில் என்மனத்தை வேருடன் களைகின்றனள்.

பலபதங்களையும் வேறுவேறு பதங்களாகத் தோற்றாது ஒரு பதமாகத் தோன்றுமாறும், வல்லினவெழுத்துக்களும் இடையிடையே விரவிவருமாறும் தொடுத்தலைச் சிலேஷம் (-செறிவு) என்ப. இதற்கு மறுதலையாவது நெகிழிசையுண்டாமாறு தொடுத்தல். இங்கே காட்டிய உதாரணச்சுலோகத்தின் முற்பாதி ஒருபதம் போற்றோன்றுமாறு தொடுக்கப்பட்டிருப்பினும் வல்லெழுத்து இடையிடை விரவப்பெறாமையானும் பிற்பாதியில் வல்லினம் விரவப்பெற்றிருப்பினும் அத்தொடர் ஒருபதம்போற்றோன்றுமாறின்றித் தனித்தனிப் பதங்களாகத் தோன்றுமாறு யாக்கப்பட்டிருத்தலானும் இச்சுலோகம் சிலேஷகுணத்தொடு மாறுபட்டதாய்ச் சைதில்யம் என்னுங் குற்றமுள்ளதாயிற்று.

(2) விஷமம்.

ஸமெஷ்டு வைவ விஷம: ஸமதாயா விபர்யயாத் ।

யாதொரு யாப்பு ஸமதை (-ஒருமுறைப்பாடு) என்னுங் குணத்துக்கு மாறாக உள்ளதோ அது விஷமம் (-ஒருமுறைப்பாடற்றது) எனப்படும்.

உதாரணம்:—

கோகிலாலாபவாசாலோ மாமேதி மலயாநிலஃ ।
உச்சலச்சீகராச்சாச்சநிர்ஜ்ஜராம்பஃ கணோக்ஷிதஃ ॥

குயில்களின்கூவுதலால் மதுரத்தொனியுள்ளதாயும், வெளிக் கிளம்புகிற திவலைகளுடன்கூடியதும் தெளிந்ததுமான மலையருவி யின் நீர்த்துளிகளால் நனைக்கப்பட்டதாயுமுள்ள தென்றற்காற்று என்மேல் வீசுகின்றது.

இச்சுலோகத்தின் முற்பகுதி மென்னடைவாய்ந்தும், பிற் பகுதி வன்னடைபயின்றும் ஒருமுறைப்பாடின்றி யாக்கப்பட் டிருத்தலால் இது வைஷம்யம் என்னுங் குற்றமுடையதாயிற்று.

(3) கடோரம்.

ஸௌகுமார்யவிபர்யாஸாத் கடோரா உபஜாயதே ॥ ௧௨ ॥

சௌகுமார்யம் என்னும் குணத்தொடுமாறுபடக் கடினமா யுள்ள எழுத்துக்களே பயின்றுவருமாறு யாக்கப்பட்ட செய்யுள் 'கடோரதை' என்னும் குற்றமுள்ளதாகிறது.

உதாரணம்.—

ஜ்வலிதத்ரீத்தாம்ஹ்ருத்வித்ஸ்வஃ க்ஷிதாம் பதிரத்விட்த்ருக் ।
க்ஷித்ஹ்நீஃ ஸாஞ்த்ருக்ஷ்த்ருஷ்டைஷ த்வீர்ஷா ஜேஹ்நீயிஷீஷ்ட வஃ ॥

நெருப்பில் உதித்தவரும் கிரௌஞ்சகிரியைத் துளைத்தவரும் விண்ணவர்சேனைக்குத் தலைவரும் பன்னிரண்டுகண்களுடைய வருமான முருகவேள், கொடூரமான கோபப்பார்வையால் உங்க ளுடைய பகைவர்களைப் பெரிதும் மாய்ப்பாராக.

இந்தச் சுலோகத்தில் கடிய ஓசையுண்டாமாறு சொற்கள் தொடுக்கப்பட்டிருத்தலால், இது ஸௌகுமார்யம் (-கடினமற்ற இனிய எழுத்துக்களாலாக்கப்படும் இயல்பு) என்னுங் குணத்தொடு மாறுபட்டதாய்க் கடினமெனப்படுவதாயிற்று.

II. பொருள்பற்றிய அரீதி.

யதா காந்திப்ரஸாதார்த்தவ்யக்தீநாமந்யதாமதி: ।
அர்த்தப்ரயோக: ப்ரோக்தஸ்தஸ்ய வாக்யகுணவிபர்யய: ॥ ௩௩ ॥

காந்தி (-உலகியல்பிறழாது கூறப்படுதல்), பிரஸாதம் (-தெளிவுடைமை), அர்த்தவியக்தி (-உய்த்தலில்பொருண்மை): என்னும் மூன்றுகுணங்களோடும் மாறுபடத்தொடுத்தலைப் பொருள்பற்றிய அரீதி என்று கூறுவர்.

[அம்மூவகைக் குற்றமுள்ள வாக்கியங்களும் முறையே கிராமியம், அப்ரஸந்நம், நேயார்த்தம் என்று கூறப்படும்.]

(1) அப்ரஸந்நம்.

அப்ரஸந்நம் ஸவேதாக்ஷ்யம் ப்ரஸாதஸ்ய விபர்யயாத் ।

ப்ரஸாதம் (-தெளிவுடைமை) என்னும் குணத்தொடு மாறுபடத்தொடுத்த வாக்கியமானது, [அப்ரஸாதம் (-தெளிவில்லாமை) என்னும் குற்றமுடையதாய்] அப்ரஸன்னம் (-தெளிவில்லாதது) என்று கூறப்படும்.

உதாரணம்:—

அநங்கக்ஷௌமவக்த்ர வியதோ நா ராஜிகா ।
யஸ்யா அநத்ருஜ்ஜநாப்ஜஸத்ருக்ஷாங்கோ வலக்ஷகு: ॥

வெளுப்பல்லாத(-நீலநிறமுள்ள)உற்பலமலர்களுக்குச்சமமான களங்கத்தையுடையவனும் வெண்மைநிறமான கிரணங்களையுடையவனுமாகிய சந்திரன் யாதொரு ஆகாசத்தில் விளங்குகிருனே அந்த ஆகாயத்தைப் பறந்துசெல்லுகிற அன்னப்பெடையானது அலங்கரித்தது.

இங்கே காணப்படும், 'அநங்கம்' 'வியதோ நா' 'அநத்ருஜ்ஜநாப்ஜ' 'வலக்ஷகு:' என்னும் சொற்கள் இங்கு வழங்கப்பட்ட பொருளில் பிரஸித்தமாயுள்ளனவல்ல; ஆதலால் இச்சுலோகம் அப்ரஸந்நம்' எனப்பட்டது,

(2) நேயார்த்தம்.

𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌨𑍇𑌯𑌾𑌰𑍍𑌥𑌮𑍍𑌅𑌰𑍍𑌥𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ॥ ௰௪ ॥

அர்த்தவ்யக்தி (—உய்த்தலில்பொருண்மை) என்னும் குணத்தொடுமாறுபட்ட வாக்கியம் நேயார்த்தம் (—உய்த்துணர்பொருண்மைத்து) எனப்படும்.

உதாரணம்:—

𑌮𑌹𑍀 𑌮𑌹𑌾𑌵𑌰𑌾𑌹𑍇𑌣 𑌲𑍋𑌹𑌿𑌤𑌾𑌦𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍋𑌦𑌧𑍇𑌃 ।

[𑌇𑌤𑍀𑌯𑌤𑍍𑌯𑍇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌦𑌿𑌷𑍍𑌟𑍇 𑌨𑍇𑌯𑌾 𑌲𑍌𑌹𑌿𑌤𑍍𑌯𑌹𑍇𑌤𑌵𑌃 ॥]

'பூமியானது ஆதிவராஹத்தினுல் செந்நிறம்படைத்த கடலினின்றும் எடுக்கப்பட்டது': [என்று இவ்வளவே குறிப்பிட்டு நிறுத்திவிட்டால் (கடல்) செந்நிறம்படைத்ததற்குரிய காரணங்கள் வெளிப்பட்டிலாமையால் அவற்றை உய்த்துணர்ந்துகொள்ளவேண்டும். ஆகையால் அங்ஙனம் கூறுவது நேயார்த்தம் எனப்படும்.]

(3) கிராமியம்.

𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।

காந்தி (—உலகொழுக்கிறவாமை) என்னும் குணத்தொடுமாறுபடக்கூறும் வாக்கியத்தைக் கிராமியம் (—உலகொழுக்கிறந்தது) என்பர்.

உதாரணம்:—

𑌵𑌿𑌰𑌹𑍇 𑌤𑍇 𑌵𑌿𑌷𑍀𑌦𑌨𑍍𑌤𑌂 𑌨𑌿𑌷𑍀𑌦𑌨𑍍𑌤𑌂 𑌤𑌵𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍇 ।

𑌕𑌨𑍍𑌯𑍇 𑌕𑌾𑌮𑌯𑌮𑌾𑌨𑌂 𑌮𑌾𑌂 𑌨 𑌤𑍍𑌵𑌂 𑌕𑌾𑌮𑌯𑌸𑍇 𑌕𑌥𑌮𑍍 ॥

ஏ கன்னிப்பெண்ணே! உன்னைவிட்டுப் பிரியுங்காலத்தில் வருந்துபவனையும் உன்னருகே (எப்பொழுதும்) உட்கார்ந்திருப்பவனையும் உன்னைக் காதலிக்கிறவனையுமுள்ள என்னை நீ ஏன் காதலிக்கவில்லை?

'கன்னி' என்பவள் காமக்குறிப்புக்குரிய பருவமடையாத பெண்ணாதலால், அவளையணுகிக் காதற்குறிப்புணர்த்துதலும், அதை யுணர்த்தும்போதும் குறிப்பானன்றி வெளிப்படையாய் உணர்த்துவதும் சுவையையழித்து அருவருக்கத்தக்கனவாம். ஆதலால் இது கிராமியம் எனப்பட்டது.

III சொல்லும் பொருளும் பற்றிய அரீதி.

ஓஜோமாதுர்யௌதார்யம் நஸ்பஷ்டம் யத்ர ஜாயதே ॥ ௩௫ ॥
யஸ்மின்ஸ்தத்வாக்யம் தத்விதோ விதுர் அரீதிகம் ।

ஓஜஸ் (-வலியுடைமை), மாதுரியம் (-இன்பமுடைமை), ஔதார்யம் (-உதாரமுடைமை) என்ற மூன்றுகுணங்களும் மேம்படப் பொருந்தாது ரீதியொடு மாறுபட்டுள்ள வாக்கியத்தைச் 'சொல்லும் பொருளும்பற்றிய அரீதி' என்னும் குற்றமுள்ளதென்பர்.

[இம்மூன்றுகுணங்களோடும் மாறுபட்டுவரும் வாக்கியத்தை முறையே அஸமஸ்தம், அநிர்வ்யூடம், அநலங்காரம் என்று கூறுவர்.]

(1) அஸமஸ்தம்.

வாக்யே யத்ர விரோதோ ரீதிம் ஸவைத்ருப்யாதோஜோவியோகத: ।
அஸமஸ்திதி ப்ராஹு: தோஷம் தத்வித தத்வித: ॥ ௩௬ ॥

யாதொருவாக்கியத்தில் ஓஜஸ் (-வலியுடைமை) என்னும் குணத்தொடு மாறுபடத்தொடுத்தலால் வைதர்ப்ப முதலிய ரீதி (-நெறி) மாறுபட்டிருக்கிறதோ அவ்வாக்கியத்தை, அறிந்தவர்கள் அஸமஸ்தம் என்று கூறுவர்.

உதாரணம்:—

> ஸ்மர: ஸர: ஸகா: காந்த:
> காய: கோபய நோ க்ருஶ: ।
> ஸ்மரதோ மாதோ நாத்யதி காமோ
> மோஹோ ஜாதோ த்வயோ மதா ॥

மன்மதன் கடினனுயிருக்கிறுன்; கணவன் தூர்த்தனுக (-ப்ரத்தனுக) விருக்கிறுன்; (என்)சரீரம் கோபத்தால் மெலிந்து விட்டது; (இப்போது) கோபமும் போய்விட்டது; அநுராகமே மேலிட்டுவிட்டது; அதனுல் மயக்கமும் உண்டாயிற்று; உயிரும் கழிந்தது.

இந்தச் சுலோகத்தில் அருவருக்கத்தக்க மிகப்பெரிய தொகை நிலைத்தொடர்களின்றிப் பொருளமைதி நன்றுயிருந்ததேயெனினும், சிலேஷம் (-செறிவு) முதலிய குணமின்மையால் இது வைதருப்ப நெறிக்கு ஒத்ததன்று; சொற்றொடராலும் பொருள்வகையாலும் வலியின்மையால் கௌடநெறிக்கும் ஒத்ததன்று.

வெறுக்கத்தக்க கடினயாப்பின்றித் தொகைநிலைத்தொடர்கள் பயின்றுவருகின்ற வாக்கியத்திலே ஓஜஸ் (-வலிமை) என்னும் குணம் அமைந்துவிளங்கும். இச்சுலோகம், தொகைநிலைத்தொட ரொன்றேனும் வரப்பெருமலிருப்பதோடு, வெறுக்கத்தக்க கடின ஓசையுண்டாமாறு முற்பகுதி யாக்கப்பட்டுமிருத்தலால் வலியுடைமை என்னுங்குணத்தொடு முற்றும் முரண்பட்டதாய் அஸமஸ்தம் எனப்படுவதாயிற்று.

உத்ராபி பந்தபாருஷ்யம் ஶைதில்யம் ச நியச்சதி ।
அதோ நைவாநுப்ராஸம் தாக்ஷிணாத்யா: ப்ரயுஞ்ஜதே ॥ ௩௭ ॥

அஸமஸ்தம் என்னுங் குற்றத்திற்கு மேலே உதாரணங்காட்டிய சுலோகம்போன்றவைகளெல்லாம் தொடர்நிலையைக் கடினவோசையுடையதாமாறும் நெகிழிசையுடையதாமாறும் செய்கின்றன. ஆகையால் இதுபோன்ற குற்றம்பயக்குமாறு நீண்டுதொடர்ந்து வரும் அநுப்பிராஸத்தை (—வழியெதுகையை)த் தென்னுட்டுப் புலவர் (—வைதருப்பகவிகள்) வழங்குவதில்லை.

(2) அநிர்வ்யூடம்.

ஶய்யாபர்வ்ருத்யோ யத்ர ஜாயதே ரீதிவர்ணநாத் ।
தத³நிர்வ்யூடமித்யுக்தம் காவ்யஸர்வஸ்வவேதி³பி⁴: ॥ ௩௮ ॥

ரீதியைக்கடந்துசெல்லுவதால் மாதுர்யம் (-இனிமை)என்னும் குணம் கெட்டுநிற்கின்ற வாக்கியத்தைக் காவியமர்மமறிந்தவர்கள் அநிர்வ்யூடம் என்று கூறுவர்.

உதாரணம்:—

𑌨𑌖𑌿𑌨𑌾𑌂 𑌚 𑌨𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌶𑍃𑌙𑍍𑌗𑌿𑌣𑌾𑌂 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌣𑌿𑌨𑌾𑌮𑍍 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑍋 𑌨𑍈𑌵 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌰𑌾𑌜𑌕𑍁𑌲𑍇𑌷𑍁 𑌚 ॥

நகமுள்ளபிராணிகளுக்கும், நதிகளுக்கும், கொம்புடைய பிராணிகளுக்கும், ஆயுதந்தாங்கிய கையுடையவர்களுக்கும், பெண்களிடத்திலும், அரசர்களிடத்திலும் விசுவாஸம் (- நம்பிக்கை) செய்யவே தக்கதன்று.

இங்கே, முன்பகுதியில் நான்குசொற்களுக்கு ஆறும்வேற்றுமையுருபுகொடுத்துக் கூறியமுறைப்படியே பின்பும் கூறாது இரண்டு சொற்களுக்கு ஏழாம்வேற்றுமைதந்து கூறியது குற்றமாதலாலும், பொருளின் இனிமையின்மையாலும் இது 'மதுரம்' என்பதனோடு மாறாய் 'அநிர்வ்யூடம்' எனப்படுவதாயிற்று.

𑌮𑌧𑍁𑌰𑌂 𑌰𑌸𑌵𑌦𑍍𑌵𑌾𑌚𑌿 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑍍𑌯𑌪𑌿 𑌰𑌸𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।
𑌯𑍇𑌨 𑌮𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌧𑍀𑌮𑌨𑍍𑌤𑍋 𑌮𑌧𑍁𑌨𑍇𑌵 𑌮𑌧𑍁𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ॥ ௫௧ ॥

𑌯𑌯𑌾 𑌕𑌯𑌾𑌚𑌿𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾 𑌯𑌤𑍍𑌸𑌮𑌾𑌨𑌮𑌨𑍁𑌭𑍂𑌯𑌤𑍇 ।
𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌾 𑌹𑌿 𑌪𑌦𑌾𑌸𑌤𑍍𑌤𑌿𑌃 𑌸𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌸𑌾 𑌰𑌸𑌾𑌵𑌹𑌾 ॥ ௫௨ ॥

யாதொரு மாதுர்யம் என்னும் குணத்தினால் அறிஞர்கள் மதுவினால் களிப்படையும் வண்டுபோலக் களிப்படைகிறார்களோ அத்தகைய மாதுர்யகுணமென்பது, சொல்லிலும் பொருளிலும் சுவைமிகுந்திருத்தலால் நிகழ்வதாகும். யாதேனும் ஒருவகையான ஓசையொப்புமையுடையதாயும், மோனை எதுகை என்னும் தொடைவிகற்பங்களுடையதாயும் வரும் சொற்றொடர் சொற்சுவையுடையதெனப்படும்.

(3) அநலங்காரம்.

யத்³ரீதேரநிர்வாஹாதௌ³தா³ர்யஸ்ய விபர்யய: ।
வாக்யம் தத³நலங்காரமித்யாஹுர்விதோ³ விது³: ॥ ௪௧ ॥

எவ்வாக்கியத்தில் இருவகை (வைதருப்பம், கௌடம்) நெறிகளையும் கடத்தலால் ஔதார்யம் என்னும் குணம் கெட்டொழிகிறதோ, அவ்வாக்கியத்தை அநலங்காரம் (-பொலிவற்றது) என்று கூறுவர் அலங்காரவியல்பறிந்தோர்.

உதாரணம்:—

தீ³ர்க⁴புச்ச²ஶ்சதுஷ்பாத³: ககுத்³மாந் லம்ப³கம்ப³ல: ।
கோ³ரபத்யம் ப³லீவர்த³ஸ்த்ருணமத்தி ஸமேத⁴ஸ: ॥

நீண்ட வாலுள்ளதும், நான்கு கால்களையுடையதும், பெரிய இமிலுடையதும், தொங்குகிற உரோமங்களுடையதும், பசுவின் கன்றுமான காளை நன்றாகப் புல்லைத்தின்னுகிறது.

இந்தச் சுலோகத்தில் அடைமொழிகளுக்குச் சிறந்தபொருளில்லாமையால் இது, உதாரமென்னும் குணத்தொடு மாறுபட்டதாம். வேறுவகைக்குணமொன்றும் இதன்கண் இல்லாமையாலும் இது இருவகைநெறிக்கும் ஒவ்வாத வாக்கியமாயிற்று. இங்ஙனம் பொருட்பொலிவும் சொற்பொலிவுமின்றி வறிதேநின்றமையால் இவ்வாக்கியம் அநலங்காரம் எனப்படுவதாயிற்று.

ஶ்லாக்⁴யைர்விஶேஷணைர்யுக்தமுதா³ரம் வாக்யமிஷ்யதே ।
யதா² லீலாம்பு³ஜக்ரீடா³ஸரோ ஹேமாங்க³தா³த³ய: ॥ ௪௨ ॥

சிறந்த அடைமொழிகளுடன்கூடிய வாக்கியம் உதாரமென்று கூறப்படுகிறது. எங்ஙனமெனில், லீலாம்புஜம் (விளையாட்டிற்குரிய தாமரைமலர்), க்ரீடாஸரஸ் (-நீர்விளையாட்டுப்பொய்கை), ஹேமாங்கதம் (-பொற்றோள்வளை) என்பனபோல் வரும்.

உத்கர்ஷவாந் குண: கஶ்சித் யஸ்மிந்நுக்தே ப்ரதீயதே।
தது³தா³ராஹ்வயம் தேந ஸநாதா² காவ்யபத்³த⁴தி: ॥ ௪௩ ॥

எந்தவாக்கியத்தில், சொற்களினின்றும் மேம்பட்டகுணம் கேட்பவர்களுக்குத் தோன்றுகிறதோ அவ்வாக்கியத்தை உதார மென்பர். இவ்வுதாரகுணமே காவியநெறியிற் சிறந்துவிளங்கத் தக்கது.

[தொடரும்.]

V. S. ராமஸ்வாமிசாஸ்திரி, B.A., B.L.,
மதுரை.

அநுதாபக்குறிப்பு.

நிகழும் புரட்டாசிஸ்ரீ 13 (29-9-39)உ ஸ்ரீவில்லிபுத்தூரில் வித்வான் ரே. அப்புவையங்கார்ஸ்வாமி பரமபதமடைந்தது தெரிந்து துக்கிக்கிறோம். இவர் ஸ்ரீவில்லிபுத்தூரையடுத்துள்ள ஒரு சிற்றூரில் அறிவொழுக்கங்களிற் சிறந்த ஸ்ரீவைணவகுலத்திலுதித்தவர்; தென்மொழிப்புலமையும் வடமொழிப்புலமையும் வாய்ந்தவர்; வடமொழி தென்மொழிகளிற் காவியமியற்றும் ஆற்றலும், பாரகாவியங்களுக்கு விரிவுரையெழுதும் வன்மையும் வடமொழியிலுள்ள அரியநூல்களைத் தமிழில் மொழிபெயர்க்குந்திறமும் உடையவர்; ஸ்ரீவில்லிபுத்தூர் ஹிந்துகலாசாலையிற் பலபல ஆண்டுகள் தலைமைத்தமிழ்ப்பண்டிதராயிருந்து மாணவர்க்குத் திறம்படத் தமிழ்கற்பித்தவர்; இம்மதுரைத்தமிழ்ச்சங்கம் தோன்றியகாலந் தொட்டு இச்சங்கத்தின் அங்கத்தினராகவும் பரீக்ஷகராகவும் இருந்து தமிழ்வளர்ச்சிக் குழைத்தவர்; இச்செந்தமிழ்ப்பத்திரிகைக்கும் இடையிடையே அரிய பொருளுரைகளை யுதவிவந்தவர். தனிக்கவிகளும் தோத்திரநூல்களும் புராணங்களும் மொழிபெயர்ப்பும் விரிவுரையும் பிறவுமாக இவரியற்றிய நூல்கள் பல. அவற்றுள் அச்சேறின சில; அச்சேறாதன பல. இத்தகைப்பெரியார்பிரிவால் வருந்தும் இவர் சுற்றத்தார்க்கெல்லாம் நம் அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உ

பரதநாட்டியம்

அல்லது

நாட்டியக்கலை.*

வாத்யபூஷணம். டாக்டர் அ. சீதாராம்

(மாஜி ரூரல்மெடிகலாபீசர் R. D. B.) எழுதியது.

"கொண்ட கோலம தண்ட கோளகை கொண்டு முட்டின சென்னியே
துண்ட நீடொளிர் வதன சுந்தரத் தோளு மெண்டிசை முட்டின
கண்ட கண்கள் களிக்க வீசு கரங்கள் கண்டவர் யாவரே
பண்டு மாலறி யாது தேடிய பாத முட்டின பாதலம்."

(அகோரதாண்டவம்)

முன்னுரை.

ஒப்புயர்வற்ற புண்ணியபூமியாம் நம் பரதகண்டமானது, பரந்த இவ்வுலகில் ஒரு மணிவிளக்கெனத் திகழ்ந்துகொண்டிருத்தற்கு முக்கியகாரணம், அதன் பண்டைக் கலைச்சிறப்புக்களேயா மென்பது யாவரும் அறிந்ததே. கலைகள் அறுபத்துநான்கினையும் தன்னகத்தே கொண்டுள்ளது நம் நாடு. அத்தகைய கலைகளுள் தலைசிறந்துவிளங்குவது நாடகக்கலையாம். அக்கலையின் திருமுகமே பரதநாட்டியமென்பது சொல்லாமலே அமையும். நாடகவியல், கானம் ஒன்றினாலேயே உலகசரித்திரசம்பவங்களின் உண்மைத் தத்துவங்களை மனிதவர்க்கத்திற்கு உணர்த்தக்கூடிய தன்மை வாய்ந்துள்ளதெனக் கூறஇயலாது. ஏனெனில் பாவனை, அபிநயம், நிர்த்தனம், தாண்டவம், நடனம், இலாசியம்: முதலிய பதங்களின்

---

* இது, பரோடா கைக்குவார் ஸமஸ்தான வெளியீடாகிய நாட்டிய சாஸ்திரத்தைத் தழுவி யெழுதப்படுகிறது.

பொருள் தழுவிய பாகமான பரதநாட்டியமும் அதனுடன் சேர வேண்டுவது அவசியம்.† இது உலகம் தோன்றுதொட்டு அறிந்தோர் உண்மையாம்.

பரதநாட்டியத்தின் தனிச்சிறப்பு யாதெனில் நிகழ்ச்சிகளின் தத்துவங்களைச் சொற்கொண் டியம்பாது அபிநயத்தாலேயே நமக்குப் புலனாகும்படிசெய்யுந் தன்மையேயாகும். ஸ்ரீகண்ணபிரான் வேணுகானநர்த்தனம்புரிதலையும், சிவபெருமான் ஞானசக்தி கிரியா சக்திகளுடன் சூக்கும விசேட லீலாவிநோதங்களைப் புரிதலையும் நமக்கு எளிதில் உணர்த்தக்கூடியதும் பரதநாட்டியமே. எனவே இக்கலையின்பெருமையை யாரே முழுதும் எடுத்துக்கூறவல்லார்.

பரதம்.

பரதமென்பது பாவம், ராகம், தாளம்: என்னும் மூன்றினையுங் கூறும் நூலுக்கு முதலெழுத்துக்களின் இலச்சினையாற் போந்த காரணப்பெயர். பாவமென்பது உள்ளக்கருத்தைப் பிறர்க்குத் தெரிவிப்பதாம். இராகமென்பது ஓசையின் வேறுபாடாம். தாளமென்பது மேற்கூறிய பாவ ராகங்களுக்கு ஒத்திருக்கும்படி இசைக்கும் ஓசையாம்.

எண்ணத்தின்மூர்த்தியாகிய பாவமும், சத்தமூர்த்தியாகிய ராகமும், காலமூர்த்தியாகிய தாளமும் பக்குவமாக ஐக்கியமடைந்து நேர்த்தியாகப் பரிணமிப்பதுதான் 'பரதநாட்டியம்'.

---

† 'நடையுறு கால்கள் நடிக்கும் பேதம்
அடைவெனச் செப்பும் நடனமாமே'

'விழிசிரங் கைகால் மெய்யுடன் லயமிசை
ஏளின பாவம் நாட்டிய மாமே'

'இசையுடன் நடனம் நிர்த்த மாமே'

'இசையுடன் பாவம் இலாசிய மாமே'

என்னுஞ் சூத்திரங்கள் இங்கே நோக்கத்தகும்.

'பாவமொ டிராக தாளமிம் மூன்றும்
பகர்வதாற் பரதமென் றுரைப்பர்'—

என்ற ஆன்றோர்வாக்கும் நோக்கத்தகும்.

பரதசாஸ்திரத்தின் இரகசியப்பொருள்.

பாவம் ராகம் தாளம்: மூன்றும் இசைந்தது தாண்டவமாகும்.

பாவத்துள் மனோபாவம், அபிநயபாவம், ரசபாவம்; என மூன்று வகையுண்டு. அவற்றுள், சர்வவல்லமையுள்ள கடவுளென்னும் பரமேசுவரன் சகலவுலகங்களையும் ஆன்மாக்கள்நிமித்தம் படைக்க நினைத்ததை மனோபாவமென்றும், நினைத்தவுடன் அசைத்ததை அபிநயபாவமென்றும், அசைத்தவுடனுதித்த சிற்சத்தியைத் தழுவினது ரசபாவமென்றும் ஒருசாரார் கூறுவதுண்டு.

மேலும்,ரசபாவத்தினால் ஓசைதொனித்ததை இராகமென்பர். இராகத்தினாற் சத்தி சிவமாய்நடித்ததைத் தாளமென்பர்.

இம்முறையே வரும்வழி, ஆனந்தத்தாண்டவமானது சுத்தப் பிரமத்தின் அசைவாம். சிருங்காரத்தாண்டவமானது சத்தியைத் தழுவினது. விஷ்ணுதாண்டவமானது ஓசைதொனித்த நாதமென்பது. பிரமதாண்டவமானது மூர்த்திகரித்து நடித்தது.

அன்றியும், சகல ஜீவராசிகளும் நினைப்பது மனோபாவமாகவும், அவயவங்களையசைப்பது அபிநயபாவமாகவும், முகக்குறிகள் ரசபாவமாகவும், பேசுந்தொனிகள் இராகமாகவும் கால்களின் கதி பேதங்கள் தாளமாகவும் கூறுவர் மற்றொருசாரார்.

நாட்டியம்.

நாட்டியம் பாரதிவிருத்தி, ஆரபடிவிருத்தி, சாத்துவதி விருத்தி, கைசிகிவிருத்தி: என்னும் நான்குவிருத்திகளில் நிலை பெற்றுவிளங்குகிறது.

பாரதிவிருத்தி துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனவிஷயமான தர்ம சாஸ்திர காவ்யநீதிக்கிரந்தங்களாய் அபிவிருத்தியடைந்து வீரம் கருணைகளைப் பிரகாசிக்கச்செய்கின்றது.

ஆரபடிவிருத்தி விளையாட்டு, சிலம்பம், ஆயுதப்பயிற்சி முதலானவைகளாய் அபிவிருத்தியடைந்து சதுரங்கசேனையுடன் புரியும் யுத்தத்தில் ரௌத்ர பீபத்ஸங்களைப் பிரகாசிக்கச்செய்கின்றது.

சாத்துவதிவிருத்தி கர்ம, ஞான, பக்தி யோகங்களாய் அபிவிருத்தியடைந்து அதியற்புத பயன்களைப் பிரகாசிக்கச்செய்கின்றது.

கைசிகிவிருத்தி நாயகநாயகிபாவங்களாய் அபிவிருத்தியடைந்து சிருங்கார ஹாஸ்யங்களைப் பிரகாசிப்பித்து அநேக பாத்திரங்களால் நடிக்கத்தகுந்த நாடகமாயிற்று.

இம்முறையிற் சிலப்பதிகாரத்திற் கூறப்படும் கடயம், மரக்கால், குடை, துடி, அல்லியம், மல், குடம், பேடு, பாவை, கொடுகொட்டி, பாண்டரங்கம்: என்னும் பதினோராடல்களும் தேவர்களாடியவை. ஆடியதற்குக்காரணம் அசுரரைக் கொல்லுதல்.

"புரமெரித்தல், சூர்மாத் துளைபடுத்தல், கஞ்சன்,
உரன்நெரித்தல், வாணனை வாளுய்த்தல்—பெரிய
அரன்முதலாக வேலன்முதல் மாயோன்
அமர்முதல் ஆடிய ஆறு"— (சிலப். கதை. 3. உரை.)

என்பது காண்க.

நாட்டியத்தின் வேரும், அபிநயத்தின் பூவும், ரஸானந்தமான கனியும், கீழ்க்குறித்தவைகளிலிருந்து விளங்கும்.

"காரினில் செருக்கிய கலாப மஞ்ஞைபோல்
நாரியர் அருநடம் நடிப்ப".

என்பர் கம்பர்.

மேகத்தைக் கண்டதும் மயிலுக்குக் களிப்பு அல்லது உற்சாக வெறியுண்டாகிறது. அந்த உற்சாகம் மயிலைத் தோகைவிரித்தாடச்செய்கிறது. அப்படியே இதயத்தை வசீகரித்து உற்சாகம்

உண்டாக்கக்கூடிய பாவனைக்கும் உடம்பைக் குலுக்கி ஆடச்செய்யும் ஆற்றல் உண்டு. அதாவது பாவனையே நாட்டியத்தின் வேரென்றும், அபிநயத்தைப் பூவென்றும், ரஸானந்தத்தைக் கனியென்றும் கூறுவர்.

நடனவிலாசியப்பெண்கள்.

தேசங்களையாளுகின்ற அரசருக்குமுன்பு நாட்டியமாடும் பெண்ணுக்கு இராஜதாசியென்றும், நாடகமேடைகளிலும், சபைகளிலும் ஆடும்பெண்ணுக்கு அலங்காரதாசியென்றும், ஆலயங்களில் சதிர் முதலியவை ஆடும் பெண்ணுக்குத் தேவதாசியென்றும் பெயர்.

நாட்டியப்பெண்ணின் இலக்கணம்.

உருத்திரகணிகையர்மரபிற்றோன்றினவளாயும் ஒப்பிலாத சிவந்தமேனியையும் அழகையும் உடையவளாயும் அன்னத்தை ஒத்த நடையினையுடையவளாயும் அரசனுடைய சிங்காசனத்திற்குப் பத்துமுழத்திற்குக்கீழ் நின்று, திரைச்சீலையை நீக்கிப் பூரணசந்திரன்போலவும் புஷ்பித்த கொடிபோலவும் கறுத்தமேகத்தினின்றும் வெளிப்பட்ட மின்னல்போலவும் தோன்றிப் பலநிறமுடைய இரத்தினாபரணங்களைப் புனைந்து, பளபளவென்று பிரகாசிக்கும் பொற்சரிகையுடையை நடனஞ்செய்தற்கேற்க இடுப்பிற் றரித்துக் கச்சணிந்து, தோளில் உத்தரியம் தரித்துப் பொற்பதுமைபோன்று, புனுகு பன்னீர் களபம் பூசிக்கொண்டும் அன்னம்போல ஒலிக்கின்ற சதங்கையைக் காலில் அணிந்துகொண்டும் இருப்பவள் நாட்டியஞ்செய்யத் தகுதியுடையவளாகும். அவள் வயது 12 முதல் 28க் குட்பட்டதாக இருத்தல்வேண்டும்.

நாட்டியமண்டப லக்ஷணம்.

நடனமண்டபம் கிழக்கு மேற்கு 64 தச்சுமுழ நீளமும் தெற்கு வடக்கு 32 தச்சுமுழ அகலமும் உள்ளதாகியும், கீழ்த்திசையில் வாயிலும் கதவுநிலையும் சாளரங்களும் உள்ளதாயும் இருக்கவேண்டும்.

கரம்.

ஒற்றைக்கை. 23

பதாகை, திரிபதாகை, பிறை, சர்ப்பசிரம், சாலேயம், மான்றலை, பத்மகோசம், சிலீமுகம், தேசிமுஷ்டி, சிகரம், சூசிகம், கபித்தம், கடகம், சந்தாங்கிசம், அன்னவாய், முகிழ், த்ரிலிங்கம், மிருகசிரம், சிங்கநகம், கூர்மம், பூரணம், மென்னிலை, உன்னதம்: என இருபத்துமூன்றும்.

இணைக்கை. 18

அஞ்சலி, புஷ்பாஞ்சலி, தாடனம், பதாகை, சங்கற்பம், டோளம், உற்சங்கம், உபசாரக்கை, அபயவரதம், மகரக்கை, கருடக்கை, பாரதிக்கை, கலகக்கை, சுபசோபனக்கை, பற்பமுகிழ்க்கை, மல்லயுத்தக்கை, பதாகைசோத்திகம், கத்தரிசோத்திகம்: எனப் பதினெட்டாம்.

சிரம். 10

சமசிரம், கம்பிதசிரம், ஆகம்பிதசிரம், தூதசிரம், விதூதசிரம், உக்கிதசிரம், நிகுஞ்சிதசிரம், அதோமுகசிரம், கந்தானனசிரம், அனுக்குசிரம்: என்னும் பத்தாம்.

பாதம். 10

சமபதம், மண்டிலபதம், குஞ்சிதபதம், அஞ்சிதபதம், வடிம்புப்பதம், தாடிதபதம், நாகபந்தப்பதம், சகடபதம், நிருத்தமூர்த்திப்பதம், கருடநிலைப்பதம்: எனப் பாதம் பத்தாம்.

நேத்திரம். 7

காந்தைக்கண், பயானகக்கண், கருணைக்கண், மூடாம்பரக்கண், அற்புதக்கண், வீரக்கண், நகைக்கண் என ஏழாம்.

ரசம். 9

பெருநகை, சோகம், கருணை, வீரம், அச்சம், சாந்தம், அற்புதம், ரௌத்திரம், சிருங்காரம்: என ஒன்பதாம்.

நாட்டியமுறை.

முதல் உதாரணம்:—அலாரிப்புப் பிடிக்கும்பொழுதே சமபத நிலையில் நின்றுகொண்டு, அஞ்சலிஹஸ்தத்துடன், சிரசிற்குமேல் இருகரங்களையும் தூக்கிச் சேர்த்துக் கூப்பி வணங்கி நேத்திரப் பார்வைகளினாலும், கழுத்தினசைவுகளினாலும் நடிக்கவேண்டும். 'உன்னைத் தூதனுப்பினேன்' என்ற பதத்தில் சந்தேகக்குறிப்புத் தோன்றப் புருவத்தை நெருக்கி, உதட்டைப் பிதுக்கி முகவாய்க் கட்டையை அசைத்துச் சிகரஹஸ்தம்பிடித்து நடித்தலால், 'என்னடி நடந்தது' என்னும் வினா வெளிப்படுதலோடு அந்தப்பதத்தில் பிரதிபலிக்கும் அந்நியசம்யோகதுக்கிதாநாயகியின் பரிகாசமும், பொருமையும், குமுறுதலும் நன்குவிளங்கும். (G. K. S.)

இரண்டாவது:—'படுக்கை அலங்கரித்து' என்ற பதத்தில் வலக்கை அர்த்தசந்திரா, இடக்கை பதாகை. அர்த்தசந்திரஹஸ்தத்தை வலச்செவிக்குச் சமீபமாய் வைத்துக்கொண்டு பதாகைக் கையை அர்த்தசந்திரஹஸ்தத்தின் முழங்கையில் படும்படியாக வைத்துத் தலையை வலப்புறத்தில் சாய்த்தல்வேண்டும். இந் நடிப்பு நாயகனைச் சயனத்திற்கு அழைப்பதைக் குறிக்கிறது.

மூன்றாவது:—வலக்கை சூசியும் இடக்கை சிம்மமுகமும் ஆக்கிப் பாதங்களை முன்னும் பின்னுமாக வைத்து நடந்தும் இரு கரங்களையும் முழங்கைவரையிலும் தூக்கி அசைத்தும் நடித்தல். இது, கோகுலத்தில் கோபாலர்கள் பசுக்களை மேய்த்துக்கொண்டு போவதைக் குறிக்கும்.

நடனக்குற்றங்கள்.

வியர்வை துடைத்தல், கண்களைப் பிசைதல், சபைக்கு முதுகு காட்டல், கேசத்தை வகிர்தல், மூக்கைத்தடவல், தும்மல், முகத்தைத்திருப்பல், முகங்கோட்டல், வேறுமுகங்காட்டல் முதலியன நடனக்குற்றமாம்.

நாட்டியத்தால்வரும் பயன்.

சுருதி தாயாகவும், கீதம் தந்தையாகவும், வாத்தியம் மித்திரனாகவும், தாளம் சோதரனாகவும், நவரசம் மனைவியாகவும் பரதநூலுணர்ந்தோர் சொன்னார்கள். இராக ஈனத்தால் வறுமையும், நாட்டியவீனத்தால் தேகநாசமும், வாத்தியவீனத்தால் கீர்த்திக் குறையும், தாளவீனத்தால் அமங்கலமும் வரும்.

முடிவுரை.

இத்தகைச் சிறப்புவாய்ந்த பரதநாட்டியத்தின் நுட்பமான செய்திகள், இதுகாறும் சுருங்க எழுதப்பட்டன. இதிற் காணப்படுங் குற்றங்களை நீக்கிக் குணமிருப்பிற் கொள்க.

இன்னும் விரிவானசெய்திகளை அறியவிரும்புவோர், பல பழைய நூல்களிலிருந்தும் ஏட்டுச்சுவடிகளிலிருந்தும் தொகுத்த பரதநாட்டிய விஷயங்களை ஆங்கிலபாஷையில் வடமொழிமேற்கோள்களாலும் அபூர்வசித்திரங்களாலும் விளக்கியெழுதி என்னால் அச்சிடப்பெற்றதும், வித்தியாநிபுணரான டாக்டர் ஸ்ரீ ஆநந்த K. குமாரசாமி அவர்கள் முன்னுரையுடன் கூடியதும், இந்திய அரசாங்கத்துப் புராதனவஸ்துக்களைப்பற்றிய இலாகாவின் மேலதிகாரியான ஸ்ரீ ராவ்பஹதூர் K. N. தீக்ஷித், (M.A., F.R.A.S.B.) அவர்களால் நன்கு மதிக்கப்பெற்றதும் விரைவில் வெளிவரும்நிலையிலுள்ளதுமான நாட்டியக்கலை அல்லது புராதன இந்திய நடனம் என்னும் புத்தகத்திற் காணலாம்.

ஸ்ரீ:

இராமசெயம்.

(இராமாயணத்திருப்புகழ்.)

ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்.—திருவள்ளுவர்.

புகழாவது கொடை அறிவு ஆண்மை: முதலியவற்றுள் ஓரொன்று காரணமாக நிகழ்ந்து இறவாதுநிற்குங் கீர்த்தியாம். இது உரையும் பாட்டுமென இருதிறப்படும். இது, கொடை முதலியனவெல்லாம் ஒருங்குடைய கடவுள்திறத்தாயின் திருப்புகழ் எனப்படும். அம்முறையில் இராமசெயம் என்னும் இது, பெருங் கொடைவள்ளலும் பேரறிவும் பேராற்றலும் உடைய ஈடும் எடுப்பு மில்லாத் தனிவீரனுமாகிய இராமபிரான்விஷயத்திற் செய்யுள் வடிவாயெழுந்த புகழ்நூலாகும். 'நீடிய அரக்கர்சேனை நீறுபட் டழிய இராமன் வாகைசூடியதுபற்றியெழுந்ததாகலின் இது இராம செயம் எனப்பட்டது. இராமசரிதங் கூறுதலின் இராமாயணத்திருப் புகழ் என்று இதனை வழங்குதலும் உண்டு.

இது, பாரதியப்பன் என்ற திருநாமமுடைய புலவர்பெருமானால், கல்வியிற் பெரிய கம்பநாடர் இயற்றிய இராமாவதாரத்தின் வழிநூலாக இயற்றப்பட்டது. இதனை,

'துற்றபுகழ் கொண்டு பாரதி
யப்பனுனை நெஞ்சிலேகொடு
சுத்தகவி கம்பநாடனினிதோதும்
சொற்படிவிளம்பும் ராமசெயத்தினை'

என்னும் இந்நூலின் யுத்தகாண்டத்து 97-ஆம் செய்யுளால் அறியலாம். இந்நூலாசிரியர் காலம் முதலிய ஒன்றும் அறியுமாறில்லை.

இந்நூலுள் ஒவ்வொரு பாட்டிலும் பிற்பாதியில் இராம சரிதம் முறைபிறழாது தொடர்ந்துவர, அச்சரித்திரப்பகுதி யோடு பொருந்துமாறு 'இராமபிரானையே பெருமாளே என

விளித்து முன்னிலையாக்கிக்கொண்டு, முற்பாதியில் தம்குறைதினைந் திரங்கி, அது தீர்த்தருளுமாறு வேண்டி, பொருளமைதியும் சந்த வின்பமும் கற்பனைகளும் அணிநலமும் சுவைநலமும் மிக, ஆங் காங்குக் கம்பநாடருடைய செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொரு ளிற்சிறிய சொற்றொடர்களும் கருத்துக்களும் பயின்றுவரும்படி ஆசிரியர் கவிகளையமைத்திருக்கும் அழகு, படிப்போர்க்குக் கழி பேருவகை விளைப்பதாயிருக்கிறது.

இந்நூல் பாலகாண்டம் முதல் உத்தரகாண்டம் இறுதியாக வுள்ள எழுகாண்டங்களில் 369 செய்யுளுடையதாகக் காணப்படி னும், இது, கம்பநாடரியற்றிய இராமாவதாரத்தின் வழி நூலாதலின் இதில் யுத்தகாண்டம் முடியவுள்ள 305 செய்யுட் களும் பாரதியப்பன் என்பவராலும் உத்தரகாண்டம் வேறொருவ ராலும் இயற்றப்பட்டிருக்கலாமென்று தோன்றுகிறது. இக் கருத்து இந்நூற்கு இராமசெயம் என்று பெயரிட்டிருத்தலாலும் வலியுறும்; இராவணவதமே இராமசெயமாதலின். அன்றியும், யுத்தகாண்டத்து 96-ஆம் செய்யுளில் இராமன் முடிசூடிப் பதினோ ராயிரமாண்டு உலகுபுரந்தமை கூறிய பாரதியார், 97-ஆம் செய்யு ளில் இராமன் தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளிய செய்தியும் நூற்பயனும் கூறி, 98-ஆம் செய்யுளால் வாழ்த்துக்கூறுகிறார். உத்தரகாண்டமும் பாரதியார் இயற்றியதாயின் அதனிறுதியிலன் றோ இராமன் தன்னுடைச்சோதிக் கெழுந்தருளிய செய்தியும் நூற்பயனும் வாழ்த்தும் கூறப்படவேண்டும்? அவற்றை அங்கே கூறாது இங்கே கூறுதலால் பாரதியார் யுத்தகாண்டத்தோடு தம் நூலை முற்றுவித்தார் என்று கொள்ளக்கிடக்கிறது. அன்றி, கம்பநாடரியற்றிய இராமாவதாரத்தின் வழிநூலாக இந்நூலையியற் றிய ஆசிரியர் பாரதியார், கம்பராமாயணம் யுத்தகாண்டத்தோடு முற்றுப்பெறுதலால் தாமும் யுத்தகாண்டத்தோடு நூலைமுற்று வித்து நூற்பயன் வாழ்த்து முதலியவற்றைக்கூறிப்பின் உத்தர காண்டத்தையும் இயற்றிச்சேர்த்திருத்தலும் கூடும்.

இவ்வரியநூலின் முதலைந்துகாண்டங்களே (205 செய்யுட்கள் மட்டும்) முதன்முறை பூளைமேடு ஸ்ரீ வேணுகோபாலநாயுடு அவர்களால் அச்சிடப்பெற்றுள்ளன. இப்பால் 1918-ஆம் ஆண்டில் பாலகாண்டமும் அயோத்தியாகாண்டமும் சென்னை ஸ்ரீ செ. மு. வேலு முதலியார் உரையுடன் ஸ்ரீ சி. எஸ். முருகேசமுதலியாரவர்களால் அச்சிட்டுவெளியிடப்பட்டுள்ளன. பின்பு பாலகாண்டம்மட்டும் குறிப்புரையுடன் அரிசமயதிவாகரப் பிரசுரமாக வெளியிடப்பட்டது. எனினும், யுத்தகாண்டமும் உத்தரகாண்டமும் இதுவரை அச்சிட்டு வெளியிடப்படவில்லையென்று தெரிகிறது.

இந்நூலை முழுதும் அச்சிட்டு வெளியிடவிரும்பியிருந்த எனக்கு இச்சங்கத்துப்புத்தகசாலையில் இந்நூற்சுவடியொன்று கிடைத்தது. அது மிகவும் சிதைவுற்றிருந்தமையால் அதை வைத்துக்கொண்டு நூல்முழுதும் வெளியிட இயலாதநிலையில் அச்சிடப்படாத இந்நூலின் யுத்தகாண்டச் செய்யுள்களை மேலும் சிதைந்தழியாது காக்கவிரும்பி யுத்தகாண்டத்தின் முதல் 22 செய்யுள்கள் ஏட்டிலுள்ளவாறே இப்பகுதியில் அடுத்து வெளியிடப்பட்டுள்ளன. ஏனையவும் அடுத்துவரும் பகுதிகளில் தொடர்ந்து வெளியிடப் பெறும்.

இந்நூற்பிரதியுடையார் கொடுத்துதவுவாராயின் இந்நூல் முழுவதையும் தனிப்புத்தகமாக அச்சிட்டு வெளியிட உபகாரமாயிருக்கும்.

"மூவுலகு மீரடியான் முறைதிறம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணம் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே"

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

ஸ்ரீ:

இராமஜெயம்.

(இராமாயணத் திருப்புகழ்.)

யுத்தகாண்டம்.

ஊழியில்வா யுவுங்கலங்க
வேகமதா கியுஞ்சிவந்த
ரூபமதா கியிந்த்ரியங்கள் எனலாயும்
ஓரிருநா லுவெம்புயங்க
மேலுளநா கியுங்குலங்கி
யூர்கருடே சனென்றுவந்தும் அமருடே
வாழனுமா னெனும்ப்ரசண்ட
வாயுகுமா ரனென்றுவந்தும்
வாகுவின்மீ துகொண்டெழுந்துன் இருபாத
மாசுரரே வணங்கவந்த
வீசுரனே சுமந்ததன்றி
வாகனம்வே றுகண்டியம்ப அறியேனே
ஆழியின்வா யடைந்தபின்பு
பேடொடுசே வலின்கணங்கள்
ஆதரவா யுடன்கலந்தும் உயிரேக
மாகியுலா வியுங்கொணர்ந்த
நீடிரைதா னுகந்துநண்பொ
டாடியசீர் மைகண்டும்வெம்பி அயர்போதில்
ஏழைவிசா ரமென்கொலிந்த
மோகமிதே னெழுந்தவெந்தை
ராகவரா மசந்த்ரவென்று துதிகூறி
யோரணிபா னுமைந்தனெண்கின்
நாதன்முனோ ருகந்திறைஞ்ச
ராசதமா கிவந்திருந்த பெருமாளே. (1)

நினைவுறு மனதி லொன்று
விரவிய மொழியி லொன்று
நிரவிய செயலி லொன்று — பலவாக
நிலவிய தொழிலன் வஞ்ச
னசடரி லசட னுன்ற
னெறியினி லொழுகி யன்பர் — உறவாகிப்

புனல்கொடு மதுவி ரிந்த
மலர்கொடு நறைநி றைந்த
புகைகொடு தொழுதி றைஞ்சி — அழியாத
புகழொடு நனிவி ளங்கி
யிகழ்வற வினிய தொண்டு
புரிவுறு பதவி யென்று — பெறுவேனோ

வனசனு மயனும் வந்து
சுடுகனல் புகையி லங்கை
மனைதெரு மருகு குன்று — மதில்யாவும்
வளமுற வுதவு பின்பு
நெடியவி ணிலுமி றங்கி
வசைகொடு தலைகு னிந்து — நிருதேசன்

அனலிடை முதன்ம டிந்த
குறைநிசி சரரு மைந்த
ரனைவரு மினிது வந்து — புடைசூழ
அணிநகர் குடிபு குந்து
நினைதொறும் வெருவ நின்ற
அனுமனை யடிமை கொண்ட — பெருமாளே. (2)

மருட்டிவிடும் விஞ்சு சுமைகள்
சுமத்திவிடு முந்து கரிமை
மறிக்கவிடும் வஞ்சவினைகொ — டுயிர்யாவும்
வதைக்கவிடு மங்கை விரல்கள்
குறைக்கவிடு மெங்கு மெழுதி
வழுத்திவிடு மண்டு கடவின் — மரமேறத்

துரத்திவிடு மஞ்ச ளுதவி
மறுத்துவிடு மைந்த ருறவு
துறக்கவிடும் வெம்பு களவு முதல்யாவும்
துடர்க்கவிடு நன்கு ருவையு
மறக்கவிடும் வம்பி லிரவு
துயர்க்குள்விடு ம்பொ னுடைமை யெனலாமோ

பெருத்தசபை நின்று நிருதர்
புடப்படவி ருந்த பொழுது
ப்ரகத்தர் ப்ரப லங்கண்மொழிய வொருமாமன்
பிணிப்படும தங்கள் பகர
வமைச்சரொடு மைந்தர் படைஞர்
ப்ரியப்படமொ ழிந்து பதற முதலேயவ்

விருத்தன்மதி வந்து புகல
அரக்கர்பதி சிந்தை மறுக
விலக்கியொரு தம்பி பணிய அனைவோரும்
வெருக்கொடும யங்க நெடிது
கலக்கமது கண்ட வனுமன்
விருப்புடன்வ ணங்கு பெரிய பெருமாளே. (3)

தாழ்வுறு பத்மதுங்க வபிநவ மண்டப
மீதிலி ருக்குமந்தண் மறைமுனி குண்டிகை
தாரைபெ றத்துறந்து விடுபொழு திந்திரன் முதல்வானோர்
தானவர் முற்றுநின்று செயசெய வென்றிட
மோதிய லைத்தெழுந்து முடுகுநெ டுங்கிரி
சாடிமி தித்திறங்கி யொழுகிவ ரும்பிர ளயமேபோற்

சூழ்வினை யைக்கடந்து துளவினை யன்பொடு
கூடியி ருக்கநண்பு பெறுகுவ மென்றுயர்
தூய்நிற முற்றகங்கை குடிபுகு செம்பொனின் அடிமீதே
சோர்வற வைத்தநெஞ்சு மருமலர் சிந்திடு
பாணியு முற்றிறைஞ்சு முடியுமு னன்பர்கள்
தோள்கள்நெ ருக்கவந்து முறைசெயு மின்பமும் அருள்வாயே

வாழ்வு படைத்திருந்த விரணியன் மைந்தனொ
டாடிய சொற்குநின்று தறியின்மு ழங்கியொர்
மானிட வுக்ரசிங்க வடிவொடு வந்துதன் மடியூடே
வாசலி டைப்பிளந்து குருதியை யுண்டுயி
ரோடுகு டற்பிடுங்கி நெடியபு யங்களின்
மாலையெ னப்புனைந்த முகிலுனை வென்றிட நாரணனே

வேள்வித னிற்பிறந்த கமலம டந்தையை
நீவிடு புத்தியென்ற பொழுதுமு னிந்துகை
வேல்கொடு குத்தவந்த தமயனை யஞ்சிவிண் மிசைவேறாய்
வேளையெ னக்கிரங்கு ரகுகுல புங்கவ
வாழியெ னப்பணிந்து சரணம டைந்திடு
வீடண னுக்கிலங்கை யரசுவ ழங்கிய பெருமாளே. (4)

போரிடை பார்த்தனெ டுங்கயி
லாயபி ராத்தர்செ ழும்பத
பூசைசெ யாப்பொழு தொன்றிலும் முயலேன்யான்
போவனெ னச்செலு மன்றிரு
தாள்களை நீட்டியுன் மந்திர
போதனை யாற்றுதி கும்பிடு மலர்தூவென்

நீரமு ருத்தனி நின்றிட
வாயவ னேத்திய ணிந்திடு
மேடுறு பூக்கள டங்கலும் நெடுவானின்
நீரது தேக்கிய செஞ்சடை
மேலது தோற்றிவி ளங்கவின்
யானுனை வேற்றுமை யென்றினி யுணரேனல்

மாருதி பார்த்துமொ ழிந்தபின்
வீடணன் வாழ்க்கைய றிந்தியன்
வாவென வார்த்தைவ ழங்கியும் இளையோர்கள்
வாழ்குகன் மாக்கதிர் மைந்தனும்
நீயுமெ னக்குறுபை மிஞ்சியும்
மாயவி ராக்கதர் தம்பதி முதலானோர்

வீரப ராக்ரம வெம்படை
சேனைக ளீட்டுவ ரங்குள
மேன்மைகள் கேட்டுவி ளங்கியும் அலையேற
மேலெது போக்கினி யென்றலும்
நீள்வழி நீர்க்கர சன்றர
வேணுமெ னுச்சொல நம்பிய பெருமாளே. (5)

ஓராயிர முன்பெயர் விஞ்சிய
காராயிர மம்பொனெ டுஞ்சிர
மூடாயிரம் வம்பவிழ் பங்கய விழிதானும்
ஓதாயிரம் வெம்படை தங்குகை
தானாயிர மங்கதெ னும்படி
ரூபாகிருதி யென்றதெ ளிந்துனை யிருபோதுந்

தாராயிர முங்கொடு தெண்டனி
டாதேயிர வும்பக லும்பல
சாகாதம்வி ளம்பியு ழன்றிடு தமியேனுஞ்
சாதேவன றிந்தபெ ரும்பதி
னாருயிர வஞ்சவு டம்பிடை
தாமோதர னென்றறி யும்பதம் அடைவேனோ

நீராழமு ணர்ந்துவி ளங்கிய
கோமான்வரு ணன்றனை நெஞ்சினில்
நேரேகொடு மென்புலி னங்கொடு கிடையாகி
நீதாவழி யென்றுந யஞ்சொலி
நாளேழும கன்றபின் வெம்புறு
நீலாசல மொன்றென நின்றிது சிறுபான்மை

மாராசத வொண்டிறல் கண்டல
தோரானவ னென்பரப லந்தனை
வாள்வீர றிந்திடு மென்பதொ ரளவாக
வாராதது கண்டுத டஞ்சிலை
யாலேவழி கண்டிட லென்றொரு
மாகோபமெ ழுந்திட நின்றருள் பெருமாளே. (6)

பசையற வெளிறக்க னித்தொண்டை யுண்டு
முகமொடு முகம்வைத் துமைக்குந்த ளங்கள்
பரிமளம் விசிறக்கு லைத்தங்கி ரண்டு   கையினாலும்
பரிவொடு பிரியத் தணைத்திங்கி தங்கள்
அடைவினில் விளைவித் துவட்டங்கொள் கொங்கை
பகடென வெதிர்தைத் திடக்கண்டு கந்து   நகரேகை

இசைபடு குறியிட்டு வைத்துந்தி யந்தண்
மடுவினின் முழுகிக்கு ளித்தங்க மொன்றி
யிறுகிய துகில்கட்ட றச்சென்ற னந்த   படமீதே
யிதயமொ டுயிர்வைத் துயக்கொண்டு பெண்கள்
கலவியில் வசமுற்றி ருக்கின்ற நெஞ்சம்
இளகியு னடியிற்ப திக்குந்த வங்கள்   பெறுவேனோ

விசையுறு படகிற்பி டிக்கின்ற பண்ட
மசைவறு சகடத்தி னிற்கொண்டி றங்க
விரவிய பவளக்கொ டித்தண்டு சங்கு   வெளிகாண
வெடிபடு சுறவைக்க கப்பந்தி கிண்ட
மறைபுகு மலைசக்ர ணைக்கொண்டொ துங்க
விபுலையு முடையற்று நக்னம்பி றந்து   மிகநாண

அசுரரு மடியப்பி லத்திங்க ணின்று
பணிகளு நெளியக்கொ திக்கின்ற வங்கி
யயர்வற கமடப்பு றத்தின்கண் மண்ட   வுயர்வானோர்
அமருல கடையப்பு கைக்கொண்டு வெம்ப
வெறுவுறு வருணப்ர புக்கண்டி றைஞ்ச
வலைகடல் சுவறக்க டைக்கண் சிவந்த பெருமாளே. (7)

தாப மாம்போது நீரு நிழலு
மோக மாம்போது ஞான வுணர்வு
தாக மாம்போது பான முணவு   பசியானாற்
சாது வாம்போது கேளிர் வினைமுன்
வாது வாம்போது மோது கிரி
சாவ தாம்போது வீடு சிறிதும்   உதவாதே

லோப மாம்போது தார வுதக
மாழ மாம்போது மேடு மழையி
னூடு போம்போது மூடு கவிகை பலநூலும்
ஓத லாம்போது நீவி ரமதி
நோவ தாம்போது தீர வுடதம்
ஓசை யோங்கார நாம மலது பிறிதாமோ

கோப மாம்போது வேத வசன
வாளி தான்கூடி நாடி முடுகு
கோல மீன்பூசல் காணும் வருணன் அதுகாணுக்
கோதை பூங்கோதை கேள்வ சரணம்
நீதி நீங்காத ராம கருணை
கோயி லாந்தேவ தேவ வப்யம் எனவோடும்

வாபி ராந்தாவு ஞவி பிழையெ
னேவு போந்தாரை கூறு கெனலும்
வாரி வேந்தாள ஞேத வவன துறைகேளா
மாறு காந்தார நீவி லசுரர்
நூற தாங்கோடி பேரு மடிய
வாளி யாங்கேவி மீள வருள்செய் பெருமாளே (8)

அரவு சுமந்த வகில மெங்கு
மரவு சுமந்த துணையு மந்த
வரவு மிரண்டு வடிவ மன்று செகநீயென்
றவையு மிரண்டு வடிவ மென்று
நெடிது சுமந்த வரவு மொன்றி
யகில முமுன்றன் வடிவ மொன்று தெளிவாரார்
சுருதி முடிந்த பொருள தென்பர்
அருள்வ டிவென்ப ரறிவ தென்பர்
சுடர்ம யமென்ப ரருவமென்பர் அவரோதுஞ்
சொலவு பொருந்த விரகி னின்று
மருவி யவுன்ற னளவு கண்டு
தொழுது பணிந்து திருவ ரங்கம் மறவேனோ

வருண னையஞ்ச லெனவி ரும்பி
விரிக டலின்கண் வழிவி டென்று
மகிமை துலங்க வருளு கின்ற பொழுதேயென்
வலிமு துகின்க ணடவு மென்று
பெரிது சுமந்த பிறகு கந்து
வருந ளன்விஞ்சை வகையின் முந்தி அணைகோல
இருநில மெங்கு மினிது நின்ற
மலைகள் பிடுங்கி யனும துங்கன்
இரவி மகன்கு முதன்ம யிந்தன் வலிநீலன்
இளவ ரசன்ப னசன டங்க
வுவரி குழம்ப நளன்வி ரும்பி
யெறிவ துகண்டு மனம கிழ்ந்த பெருமாளே. (9)

விருந்தேய ழைத்தினிதி ருத்தி
யறங்கூறு நற்பகடு கட்டி
விளைந்தேவ ரப்பொருள்ப டைத்து மனைவாழ்வு
மிகுந்தூர்த னக்கிவனொ ருத்த
னெனும்பேரெ டுக்கவிசை பெற்றும்
விளங்காயி ழைக்குவச முற்று நலமேவிப்
பெருந்தேவ ருக்குவழி பட்டு
மனந்தானி னைத்தபடி மக்கள்
பெறும்பேறு முற்றியவர் கட்கு மதிகூறிப்
பிணங்காது நற்குடிப டுத்தி
நெடுங்கால மிப்படியு ழைக்கை
பிறந்தாசை யற்றதினி முத்தி யருள்வாயே
துரந்தேக விக்குலம னைத்தும்
நடந்தேம ரத்தினொடு கற்கள்
சுமந்தேய டிக்கடிகு விக்க வழிநூறு
துலங்கோச னைக்கிடைகி டக்க
மருங்கான வுட்கிடைய கற்சி
சுருங்காது பத்துவள மொத்த வருணேசன்

இருந்தேப தித்திடுபு றத்தின்
முழுங்காழி யைத்தொனிய டக்கி
யிருந்தேந ளப்பிரபொ ருத்தன் அணேகோல
இடஞ்சேர வெற்பினைய டுக்கி
நெடுஞ்சேது வைக்கடிது கட்டி
யிலங்காபு ரிக்குவழி யிட்ட பெருமாளே. (10)

புத்தி யோடுச மத்திலை யாகிலும்
வித்தை யோதுக ருத்திலே யேனுமோர்
புட்ப மாகிலு மிட்டறி யாமுரண் உளவேனும்
பொய்த்த வாசக நிட்க்ருபை யேனும
சுத்த னாகிலு நற்றொடி நாரியர்
பொற்ப யோதர நத்திய பாதக் அடியேனும்

எத்த னாகிலு மப்புற மேதிரி
மத்த னாகிலு மக்கர மானதொ
ரெட்டு மேகரு திக்கொடு ராகவ எனவோதும்
இச்சை யாகிய பத்தர்கள் போலினி
முத்திவேணுமெ னக்கரு தேனடி
யிட்ட தோர்பய பத்தியை நீமுதல் அருள்வாயே

நத்து வேலையி னக்கரை மேயபின்
வித்தை சேரு நளப்ரபு வானவன்
நற்ப தாதியி ருப்புறு பாசறை யிடம்யாவும்
நட்பி னோடுச மைத்திட வானரர்
புக்கு வாழ்வுற வப்புற மேகழை
நட்டு வாரம்வ ரிச்சுட னேமுக டதுகோலி

அத்ரி மீதுள புற்கொடு நீடிய
கற்றை சாலவு முச்சிய சாலையி
லற்ற தோர்துயில் வித்தகன் மாருதி கவிராசன்
அச்சு தாவம ரப்ரபு வேசர
ணிச்சை யேவல்ப ணித்தருள் வாயென
அச்சு வேலப ருப்பத மீதுறை பெருமாளே. (11)

வருத்தம தானபி றப்பில்
உதித்திடு யோனியு ரைக்கின்
மழைக்கன தாரைநி கர்க்கும் மகவாக
வளர்த்திடு தாயர்க ணக்கை
விதித்திடின் வேலையி னிட்ட
மணற்சிறி தாய்விடு நெய்த்த முலையாலே

திருக்குறு பாவிகு டிக்க
அருத்திய பாலது மிக்க
திருக்கழ லாணைம திக்கில் உன்தான
திரைக்கட லோர்குழி யொக்கும்
அடக்கிய வீமம தற்ற
செகத்திலே மேலுமி றக்க விடலாமோ

அரக்கர்பி ரான்விடு மொற்றர்
குரக்குரு வாயவி டத்தில்
அடுத்தவை யேதுமு ணர்ச்சி யுறுபோதில்
அவர்க்கெதிர் வீடண னுற்று
மனத்தெளி வோடு பிடித்தும்
அடித்துமு னேவிட மிக்க க்ருபையாகி

உருக்கமு நேயமு மெத்தி
யடைக்கல மாயிவன் மற்றென்
உயிர்த்துணை யானதும் வெற்றி அரசாள
உபக்ரம மானது மற்றை
யனைத்துமி ராவண னுட்க
வுரைத்திடு வீரென விட்ட பெருமாளே. (12)

விடப்பணி முற்றமு தங்கள் சிந்தின
மதக்கரி குத்திய தந்த நொந்தன
மிகுத்தெரி யக்கன லுங்கு ளிர்ந்தது கடலூடே
விடுத்திடு வெற்புமி தந்து நின்றது
கிரிக்குடு மித்தலை நின்றெ றிந்திட
விரித்திடு மெத்தையி லங்கெ ழுந்தனன் நிலமாது

படைத்தப டைத்திர ளங்கு திர்ந்தது
சுழற்றுவ ளிக்குவ லங்கு றைந்தது
பகைத்தவை யெத்தனே யுங்கு லேந்தது கனகேசன்
படைத்தவ ரப்பர லங்தொ லேந்ததவ்
வெழுத்துய ரெட்டில்வி ளேந்தி டுஞ்செயல்
பகுத்தும தித்துவி ளம்ப லிங்கினி யெளிதாமோ

அடுத்தம லேத்தலே நின்றி லங்கையி
னெருக்குதெ ருக்களு மண்ட பங்களு
மகத்தினு யர்ச்சியு மன்ற முன்றிலும் விடுதேரும்
அரக்கர்செ ருக்கும தங்க யம்பரி
யுறப்படு கொர்ச்சித முங்தெ ரிந்திமை
யவர்க்குள பொற்புநெ டுந்த டங்களும் வளர்காவும்

எடுத்தகொ டித்திர ளுஞ்செய் குன்றமும்
மதிற்குடு மித்தலே யுங்க டும்பொறி
யிணக்கமு மெய்ப்படை யும்பு ரந்தான் நகர்நாண
இருக்கையு மிக்கப்ர பஞ்ச மெங்கணும்
விழிக்கடை வைத்துவி யந்து பண்புடன்
இலக்குவ னுக்குவி ளம்பி நின்றருள் பெருமாளே. (13)

மாறிலா வருமறை யடங்க
வோதுவா ரறமெலிதல் கண்டு
மாபரா சரனிடைபி றந்து கரைகோலி
வாழுநான் முகன்வனிதை பங்கன்
வானுளோர் முனிவர்கள்வி ளங்க
மாலையா மடைவினில்வி ளம்பி யருளாயேல்

ஆறுமூ வகையெனவி ரிந்த
நீள்புரா ணமுமினிய மந்த்ர
மாகுமா கமவகையு நின்ற அறம்யாவும்
ஆசிலா மனுநெறிவ ரம்பும்
வேறுவே றுளசமய வன்பும்
ஆழிசூ ழுலகினில்வ ழங்கு மெனலாமோ

வீறுகோ புரமிசையின் வந்து
சேனைவாழ் மலையையெதிர் கண்டு
மேவுசா ரனைவினவி நெஞ்சின் மிகநாணி
வீடணு திபனிரவி மைந்தன்
ஆனபே ரவரவர்க ளெண்கின்
வீரன்மா குமுதனளன் மைந்தன் ஒருபாலோர்

ஈறிலா வனுமனவ னந்த
வாலிசே யவனவன்ம யிந்தன்
ஈசனே யனையதொரு துங்கன் இளவீரன்
ராமனே கரியவிறை யென்று
தூதரே யடைவினில்வி ளம்ப
ராவணே சுரனறிய நின்ற பெருமாளே. (14)

இருநில மீது பத்தி கொண்டு
நினதடி யேது திப்ப தின்றி
யினியொரு தேவ ரைப்பு கழ்ந்து தொழுமாறென்
எழுதவொ ணாத பொற்ப மைந்த
மரகத மேரு வொத்தி லங்கி
யினிமையி னோடு தெற்கி லங்கை முகமாகி

அரிமல ராள்செ கத்து மங்கை
துளவணி தாள்பி டிக்க வுந்தி
யயன்முத லோர்வ ழுத்தும் ரங்க நகருடே
அரவணை மீதி னிற்பொ லிந்து
நதியிடை நீகி டக்கை யந்த
அருள்பெறு வீட ணற்கி ரங்கி யல்லவோதான்

ஒருகிரி யேறி யுச்சி நின்று
நிருதர்பி ரானெ டுத்தி யம்ப
வுரியகு மாரர் மக்கண் மந்த்ரி வகைமாமன்
உயர்படை மேவு கத்த னென்று
வெகுவித மாம ரக்கர் தங்கள்
உரிமைவி டாது சுற்ற வண்டர் குலமாதர்

பரிவுட னேவல் பற்ற வெங்கை
யிருபது நால முற்பி றங்கு
பகுநெடு வாயெ யிற்று விம்ப — வொளிவீறப்
படிதரு மேக மொத்தி ருண்டு
மலைநிகர் கோபு ரத்தில் வந்து
பலதலை வீர னிற்கை கண்ட — பெருமாளே. (15)

அற்கு லாவு வெற்பெ னக்கி ளர்ந்து
முற்ற வேக னைத்து நெய்த்த துண்டம்
அற்ப வேர்வெ ழுப்ப னைத்த கொம்பு — கொடுசாடும்
அக்க டாவி னிற்ப்ர மிக்க வுந்து
கட்டு வீசு கிட்டு முட்டு துண்டி
யப்பு மோதெ னக்கொ தித்த மூன்று — நமனூர்தாம்

தெற்கு வாவெ னத்த ழுப்பி மூந்த
அட்ட காச மிட்டு யிர்க்கொ ளூந்து
சிக்க வேயு பக்ர மிக்கு மன்று — க்ருபையோடே
செக்கர் வானி டைப்ப சுத்த கொண்டல்
உற்ற கோல மொப்பு றப்பி றங்கு
சித்ர ராச பக்ஷி யிற்பு குந்து — வருவாயே

நிற்கை கோபு ரத்தி னுச்சி கண்டு
குத்து வேனெ னக்கொ தித்த டர்ந்து
நெட்ட ராவெ னப்பி டித்தி லங்கை — யுடையோனை
நெற்றி கீழ்ப டப்பு டைத்த றைந்து
சுற்றி வாலி விட்ட கட்கி டங்கில்
நிர்த்த மாடு வித்து கிர்ப்பு றங்கொ — டெல்கீறிப்

பற்கொ டேக டித்து ரப்பி மண்டி
யெற்றி வாய டித்து தைத்து வென்று
பத்து மாமு டிப்ப றித்தெ ழுந்து — நககீழற்
பத்ம பாத முற்று முற்ப ணிந்த
சுக்கி ரீவ னைத்த டக்கை கொண்டு
பற்றி யேயெ டுத்த ணைத்து கந்த — பெருமாளே. (16)

கதிபெறுநா ரதப்ரசண்ட
முனியொருநா னிலத்திழிந்து
கருணைவிடா தக்ருஷ்ணவென்று தொழுதேயுன்
கரவடமா யையிப்ரபஞ்சம்
அடிமையினோ டியற்றுகென்ற
கணமிசையே குளத்தின்மூழ்கி யவன்மூழ்கிப்

புதுமடவா ளெனப்பிறந்து
நரபதிமா பிறப்புணர்ந்து
புதல்வர்கள்பே ரர்பெற்றிடும்பை யுடன்மாழ்கிப்
புனலிடைமீ ளமற்றும்வந்து
துதிசெயநீ நகைத்துநின்ற
புனிதவினோ தசித்திரங்கள் அறிவாரார்

பதினெழுமா வௌப்ரபஞ்ச
மடைவடைவே பகுத்தல்கொண்டு
பரிவுடனே கிழக்கினின்று பொருநீலன்
பவனகுமா ரன்வெற்றிகொண்டு
குடதிசைபோ யுடற்று கென்ற
படையொடுநீ டுதற்கெழுந்து முரண்வாலி

மதலையடா செருச்செயென்று
நெறியுடனே வகுத்திரண்டு
வகைவெளமார் கவிக்குலங்கள் வனமேவி
மகிழ்கனிகா யளிக்கவென்றி
யிளையவரோ டுமுற்றிலங்கை
வடதிசைவா யில்பற்றிநின்ற பெருமாளே. (17)

அரியாகவு தித்தது மேலொரு
மதயானையி ழைத்தது நீள்பத
மணிதாழிப டைத்தது மேவிய சபையூடே
அவளாடைக ளட்சய மானதும்
அமருடிர விற்பக லானதும்
அமவாசிகை முற்பிற கானதும் அலைமூழ்கும்

ஒருசேயுயிர் பெற்றதும் வேவுறு
கரியாகிய கட்டையி ராஜச
உருவானது மிப்புவி வானவர் அறியாரோ
உனதிரடி யிற்படி யார்முழு
நரகூடுத னித்தனி யேகுவர்
உலகாயசி ருட்டிய லாதுபின் நடவாதே

ஒருநூறுவெ ளப்படை யானதொ
ரணியாகவ குத்தநி லேசுக
ரிடுகாவல்பி ரித்தபி னூறிரு வெளமோடே
யமன்வாசலின் முற்றும கோதரன்
அரிவாசல்ப்ர கத்தன்வி ராவுக
விணிமேல்திசை பற்றுக மாமகன் எனவோதி

வருதேரொடு நற்கரி மாவொடு
மடல்சேரும ரக்கர்கு ழாமொடும்
வரமேவுப டைக்கல மாகிய வகையோடும்
வடவாசல்பு றப்படு வேனென
திருதேசனெ ருப்பட வேயவன்
வருமோவென நிற்பவ னேசுரர் பெருமாளே. (18)

கஞ்சனூர் தாமே வணங்குதாள் கொங்கெழும்
பைந்துழாய் தானே முயங்குதாள் பின்புவெண்
கங்கைநீ ராலே விளங்குதாள் சந்ததம் புவிமாதுங்
கண்கொளா மாரு பவின்பமா தந்தினஞ்
செங்கையா லேநீ வுகின்றதா ளண்டமுங்
கண்டபா ரீரேழு மண்டியே கொண்டிடுந் தலைநாளிற்

றஞ்சமா ஆடே யடங்குதா ளன்பர்தஞ்
சிந்தைமீ தேபோ யமர்ந்ததாள் பண்படுஞ்
சந்தமா னூல்வேத மந்த்ரநூ லின்கொழுந் தகலாதே
தண்டியே சீராடு கின்றதாள் வெஞ்சுரஞ்
சென்றதாள் பூமாரி சிந்தியே யன்புடன்
சங்கமாய் வானோ ரிறைஞ்சுதா ளென்சிரம் புனைவேனோ

இஞ்சிதா னீரேவ லீந்தவா றும்பழந்
தம்பிமார் மூவோர்ம டிந்தவா றுந்திருந்
தெம்பியா லேகாசி தங்கையா ரங்கிழந் துளவாறும்
என்கையால் மாமானி றந்தவா றுங்குரங்
கொன்றுதான் மாநீர்க டந்தவா றுங்கடந்
திந்தவூர் தீயாடல் கண்டவா றும்பகர்ந் திடுவாயே

அஞ்சுமோ நேரேய டங்குமோ நெஞ்சினங்
கன்றுமோ பூமேல ணங்கையே தந்துவந்
தண்டுமோ சீர்வீட ணன்பெறு(ம்)முன்பதம் பெறுமோவென்
னம்பிலே போரூடு தஞ்சுமோ வஞ்சகன்
சிந்தைதா னேதோவ றிந்திலே னென்றையின்
றங்கதா நீபோ யறிந்துவா வென்றநம் பெருமாளே. (19)

ஊழியி ருக்கின் றவரொத்
தாசைமி குத்தும் பொருள்செய்
போடுபு தைத்துங் கருதிற் சுகமேயாம்
ஊனொடு றக்கங் களும்விட்
டாரொரு வர்க்குங் க்ருபையற்
றோடிய சித்தந் தெளியப் படையாதே

பாழிலு ழைக்குங் கொடுமைக்
கீழ்மைய ரைக்கண் டகரைப்
பாதக ரைக்குண் டகரைப் பலவாகப்
பாடியெ னக்கென் றதுகிட்
டாமலி லீக்கின் றவனைப்
பாரிலு யக்கொண் டடிமைக் கொளுவாயே

ஆழிய டைத்துங் கிரிமுக்
கூடமி டித்துங் கிளர்சுற்
றாலபி டித்தும் புனல்சு டகழ்தூர
ஆடலி டத்துஞ் சரணற்
றானைய ழிக்கும் படிகட்
டாண்மையு ரைத்துந் திருவைச் சிறைசேரூர்

சூழவ ளைத்தும் படையைப்
போணியிட்டுங் கெழுமித்
தோள்கள்பு டைத்துத் தருமத் துறைநாடிச்
சோரன்ம னத்தின் கிடையைக்
காணநி னைத்தங் கதனைத்
தூதுவி டுக்குங் கருணைப் பெருமாளே. (20)

கோம்பைய சைத்துச் செவியினை
முந்தநெ றித்துச் சினமது
கொண்டுவி ழித்துக் கருகிய தொருபாரக்
குன்றுநி கர்த்துச் சிறுகிய
துண்டம்வெ யர்த்துப் பொருதிறல்
கொண்டப கட்டுப் புறமிசை நமனார்தாம்

வெம்பல்க டித்துக் கயிறது
நின்றுசு ழற்றிக் கதையினை
விஞ்சவெ டுத்துப் பொரவரும் ஒருபோது
மென்கம லக்கட் கிருபையொ
டஞ்சலெ னக்கட் டுரைசெய்து
வென்றிகொள் சக்ரப் படையொடு வருவாயே

உம்பியர் பட்டுக் கொடியவள்
மைந்தர்கள் கெட்டுச் செவிமுலை
யொண்டொடி யற்றுச் சரணென விழவீரன்
உய்ந்துபி ழைத்துப் புரிசையை
நம்படை சுற்றிக் கடுகவும்
ஒண்டியொ துக்குற் றனைவினை நிருதாவுன்

அம்பொன்மு டிக்கொத் துதறினர்
உன்பதி சுட்டுப் பொருதனர்
அன்றபு றப்பட் டிலையென நகையாநின்
றஞ்சவு றுக்கிச் செழுமலர்
மங்கையை விட்டுப் பிழையெனும்
அங்கதர் சித்தத் தினிலுறை பெருமாளே. (21)

பங்கயத் தடநீர் படிந்து
தெண்டிரைப் பொனிசூழ் குடந்தை
பண்புறத் தொழுதே புயங்க அணைமீது
பைம்புனற் கடலோ வளர்ந்த
அஞ்சனக் கிரியோ வெழுந்து
பம்புறப் புயலோ விதென்று களிகூரத்

தங்குபத் தியினால் வணங்கி
யன்பருக் கருகே செறிந்து
தண்டமிழ்க் குருகூ ரர்செஞ்சொன் மறையோதிச்
சங்குசக் கரமாய் விளங்கு
திண்புயப் பொறியோடு நின்று
தஞ்சமுற் றெருகால மின்பம் உறுவேனே

இங்கெனக் கொருதூ துவந்து
வம்புரைக் குமதோ விவன்ற
னென்புதிர்த் திடுவீர் களென்ற கொடியோன்முன்
எண்படப் பிடியா வெதிர்ந்த
வஞ்சரைத் தலைகால் பிடுங்கி
யெண்டிசைப் புறமீ தெறிந்து மதின்மேனின்

றிங்கனற் கணைமாரி வந்து
சங்கரிக் குமுனே யிலங்கை
யங்கிளைத் தவர்போமி னென்று விடவோதி
அந்தரத் தினிலே யெழுந்து
செங்கதிர் ப்ரபைபோல் விளங்கும்
அங்கதப் பெருமாள் வணங்கு பெருமாளே. (22)

[தொடரும்.]

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

ஸ்ரீமத் ஞானியார்சுவாமிகள்

பொன்விழா விண்ணப்பம்.

திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியிருக்கும், திருக்கைலாய பரம்பரை, திருக்கோவலூர் ஆதீனம், ஸ்ரீமத் ஞானியார்சுவாமிகளைத் தமிழ்நாடும், தமிழ்வழங்கும் ஏனைய நாடுகளும், சிறப்பாகச் சைவ உலகமும், நன்கு அறியும். அடிகளார் பட்டம் ஏற்று ஐம்பதாண்டுகள் ஆகின்றன. இந்நிறைவுப் பொன்விழாவை வரும் நவம்பர்மாசம் 18, 19 தேதிகளில் திருப்பாதிரிப்புலியூர் மடாலயத்தில் கொண்டாடுவதென்று அன்பர்கள் முடிவுசெய்திருக்கின்றனர். உள்ளூர் அன்பர் சிலரைமட்டும் கொண்டு பொன்விழாக்குழு ஒன்று இப்போது அமைக்கப்பெற்றிருக்கிறது. தமிழ் ஜில்லா ஒவ்வொன்றுக்கும், தமிழும் சைவமும் வழங்கும் பிறநாடு ஒவ்வொன்றுக்கும், அன்பர்களை எடுத்து விழாக்குழுவினை நிறைவிக்க எண்ணியிருக்கிறது.

விழாநாட்களில் உரிய பொருள்கள் பற்றித் தகுந்தவரைக் கொண்டு சொற்பெருக்காற்றுவதோடு, ஸ்ரீமத் ஞானியார் மடாலயவரலாறு ஒன்றும், அடிகளாரது சிறப்பியல்புகளை நினைவுகூரும் "பொன்மலர்" ஒன்றும் வெளியிட முடிவுசெய்திருக்கிறது. அடிகளாரது இயற்கையறிவு, கல்வியறிவுகளையும், சமயநூல் தெளிவு ஒழுக்கவிழுப்பங்களையும், கொண்டலெனப் பொழியும் சொல்லாற்றல் திறனையும், இவ்வறிவு ஆற்றல்களால் பொதுவாகத் தமிழுலகிற்கும், சிறப்பாகச் சைவ உலகிற்கும், அடிகளார் செய்துள்ள தொண்டின்பெருமையையும்பற்றி, அறிந்த அன்பர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பினால் நினைவுப் பொன்மலரில் இதழ்களாகத் தொடுக்க ஏதுவாகும்.

தமிழ்நாட்டில் வழங்கும் நாள், கிழமை, திங்கள் வெளியீடுகளில் எழுதினால் ஆங்காங்குள்ள அன்பர்கள் பல்லாயிரவர் தெரிந்து கொள்ளவும், அக்கட்டுரைகளைப் பொன்மலரின் கண்ணிகளாகத் தொடுத்துக்கொள்ளவும் வாய்க்கும். மேற்குறித்தபடி எழுதும்

கட்டுரைகளையும், விழாக்கொண்டாடும் முறைகள் பற்றி அன்பர்கள் சொல்லவிரும்பும் கருத்துக்களையும், பொன்விழாக்குழுவின் செயலாளர்விடுதியாய "அகத்தியநிலையம், திருப்பாதிரிப்புலியூர்" என்ற முகவரிக்கு அனுப்பும்படி வேண்டிக்கொள்கிறோம்.

தமிழ்நாட்டினரும் ஏனைய தமிழன்பர்களும், சைவ அன்பர்களும், இப் பொன்விழாச் சிறப்பாக நடந்தேறும்பொருட்டுத் தங்கள் தங்களால் இயன்ற உதவியெல்லாம் செய்ய முன்வருவார் என்னும் துணிபுடையோம்.

பொன்விழாக் குழுவினர்:—

K. சீதாராம ரெட்டியார், B. A., B. L. M. L. A.

ராவ் பகதூர் R. K. வேணுகோபால் நாயுடு B. A., B. L.

ராவ் சாகிப் T. R. சக்ரபாணி ஐயங்கார் B. A, B L.,

செயலாளர்:—

வைத்யரத்நம் பு. வே. தேவராஜமுதலியார் M. D. (S).

தி. கி. நாராயணசாமி நாயுடு

குறிப்பு:—திருக்கோவலூர் ஆதீனம் ஸ்ரீமத் ஞானியார்ஸ்வாமிகளின் பொன்விழாக்கொண்டாடக்கருதியிருப்பது மனமகிழ்ச்சியளிக்கிறது. ஞானியாரவர்களுடைய சொற்பொழிவாற்றுந்திறமும் தமிழிலக்கண இலக்கியப் பயிற்சியும் பலர்க்கும் அருந்திறற்கல்வி பயிற்றிவந்திருக்கும் ஒப்புரவாண்மையும் சமயநூல்வன்மையும் பாராட்டத்தக்கன. அறிவொழுக்கமுதுமைகளால் பெரியரான இவர் போற்றற்குரியராதலால் இப்பொன்விழாக்கழகத்தார்க்கு ஊக்கமுண்டாகுமாறு தமிழ்ச்செல்வர்கள் உதவிபுரிவார்களாக.

பத்திராசிரியர்.

மதிப்புரை.

பரமார்த்ததீபம் என்னும் குருவாசகக்கோவை:—இது, திருப் பாரத்துவாசி முகவைக்கண்ண முருகனார் என்பவரால் 852 வெண் பாக்களால் இயற்றப்பெற்ற அத்துவித தத்துவ ஆராய்ச்சிநூல். இதனுள், தத்துவ ஆராய்ச்சி, தத்துவாநுஸந்தானம், தத்துவாநு பவம் என மூன்றியல்கள் உள்ளன. ஒவ்வோரியலிலும் பற்பல பொருட்டிறன்கள் உரைக்கப்பட்டுள்ளன.

உணர்விலாப் பூதப்பொருட்கூட்டமாகிய உடலினின்றும், உணர்வுடைப்பொருளாகிய ஆன்மாவைப் பிரித்துணரமாட்டாது அவ்வுடலையே யான் என்று உணரும் பொய்யுணர்வடியாகத் தோன் றும் பலவகைத்துன்பக்கூறுபாடுகளும் ஒழிதற்குரிய ஆன்ம போதத்தை அடைதற்கு இந்நூற்பயிற்சி மிகவும் உதவியாகும்.

கனவும் உறக்கமுமாகிய மனநிலைவேறுபாடுகொண்டு கட்டும் வீடும் ஆகிய ஆன்மநிலைவேறுபாடு காட்டப்படுகிறது. அது பெரும் பாலும் முன்னோர் சொல்லிய பொருளையும் இந்நூலாசிரியர்க்குக் குருமூர்த்தியான ஸ்ரீ. ரமணதேவர் ஸ்வாநுபவத்தால் ஆராய்ந் தறிந் துரைத்த பொருளையும் உட்கொண்டிருக்கிறது. அறிதற் கரிய அப்பொருள்களை அறியவிரும்புவோர் எளிதினுணர்ந்து கொள்ளும்படி செய்யுளமைந்திருப்பது பாராட்டத்தக்கது. இந் நூலிலுள்ள பலசெய்யுட்களின் பொருளமைதியையும் செய்யுளழ கையும் உற்றுநோக்குவார்க்கு அவை மிகவும் மனமகிழ்ச்சியளிக்கத் தக்கன. இடையிடையே ஸ்ரீ. ரமணதேவர் பாடல்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. ஆன்மஞானத்தை அடையுமளவில் எல்லாச் சமயத்தவர்க்கும் இந்நூல் பெரிதும் பயன்படுமென்பதில் ஐயமில்லை. இந்நூல், அதன் ஆசிரியர்க்குள்ள அத்துவிததத்துவ ஆராய்ச்சி வன்மையையும் கல்வித்திறமையையும் தோற்றுவித்து, அவர்க்கு வாய்த்த உபதேச குருமூர்த்தியின் அருணோக்கின்பெருமையை யும் காட்டவல்லது. இதன் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் சென்னை மயிலாப்பூரிலுள்ள கலைமகள் காரியாலயத்திற் பெறலாம்.

65 கடிந்தெழ - அழித்துச்செல்ல. கவட்டொடு மலங்கு அப்புலங் கொள் தாருவில் - கிளையொடு சுழல்கின்ற அந்த நிலத்தை மறைத்த தருவில். தாரு - தரு - மரம். புட்குலம் - பறவைக்கூட்டம். போகலாது - போகாது. இரைத்தல் - ஒலித்தல். குலங்கள் தாங்குநர் - குடிகளைத்தாங்கும் அரசர். நடுக்குற - நடுக்கமுடைய. குலத்துளாய் அவர்பால் நலம் கொள்வார் - குடிகளிலுற்று அவ்வரசரால் நன்மையடைவோர். குழீஇ - கூடி. கலுழ்வது - அழுதல். தருவுக்கு அரசனும் புட்குலங்களுக்கு அரசனால் ஆதரிக்கப்பட்ட குடிகளும் புட்களின் ஒலிக்குக் குடிகளின் அழுகையும் உவமை. புட்கள் இரைத்தல் குடிகள் அழுதல்போலும்: என முடிக்க.

66 கொடுவரிக்குருளை - புலிக்குட்டி. எண்கு - கரடி. கோட்டு மோட்டு அடுபுழைப் பணைக்கை மா களிறு - கொம்பினையும் உயர்ச்சியினையும் கொல்லுந்தன்மையுள்ள உட்டுளையுடைய பனைபோலும் துதிக்கையினையும் உடைய பெரிய ஆண்யானை. ஆளி - யாளி. நெடுமருப்பிரலை - நீண்ட கொம்பினையுடைய மான். படு திரைக்கரங்களால் - பொருந்திய அலைகளாகிய கைகளால். பாங்கர் - பக்கம். எற்றி - வீசி. புலிக்குட்டிமுதலியவற்றை அலைகளாகிய கைகளாற் பக்கத்தே வீசியென்க.

67 இக்கவிமுதல் பொருநை முல்லைநிலத்துச் செல்லுதல் கூறப்படுகிறது. வல்லை - விரைவு. புறவு - முல்லைநிலம். படாம் - ஆடை. தொல்லை - பழமை. குடி - குலம். மடம் - இளமை. தோகை - பெண்; உவமையாகு பெயர். தோன்றிய இல் - பிறந்தவீடு. இறைவனில் - புருடன்வீடு. சேறல் - செல்லுதல். ஏய்க்கும் - ஒக்கும். முற்பாட்டும் இதுவும் குளகம். எற்றி, பரந்து, போர்த்து, சேறலேய்க்கும்: என முடிக்க. பொருநைநதி, பொதியிலிற்றோன்றிப் பிறநிலத்துப் படர்ந்து அவ்வந்நிலவளனெல்லாங்கொண்டு கடலுக்குச்செல்லுதல், வழிவழிவந்த குலமகளொருத்தி தான் பிறந்த இல்லினின்று பொன்னும் மணியும் துகிரும் துகிலுமாதிய புனைந்துகொண்டு புக்ககம் சேறல்போலும் என்றபடி. கம்பர் சரயுநதிப்பெருக்குக்கு விலைமகளை* உவமை கூறினர்; இந்நூலாசிரியர் † வான்மீகரையடியொற்றிப் பொருநை நதிக்குக் குலமகளை உவமைகூறினர்.

68 பாற்கடம் - பாற்குடம். ஏரி - நீர்நிலை; முருட்டு மாமர முதல்- பருத்த மாமரத்தின் அடிப்பாகத்தை. கிளைத்து-கிண்டி-வேர்பறித்து. முல்லையிற் சுருட்டி - முல்லைக்கொடியாற் சுற்றிப்(பிணித்து). நாட்டலும் - நடுதலும். துணர் - (முல்லையின்) பூங்கொத்து. துளித்தல் - (தேனைச்) சிந்தல்.

* ஆற்றுப்படலம். செய். 6.

† ஸ்ரீராமாயணம்: கிஷ்கிந்தாகாண்டம். சர்க்கம். 41. ஸ்லோகம். 18.

சோதி - ஒளியுருவினனாகிய திருமால். வான்பொருட்டு - தேவர்பொருட்டு. வான் - இடவாகுபெயர். அன்னாள் என்றிருப்பதை அந்நாள் என்று திருத்திக்கொள்க. அந்நாள் - அக்காலத்து; அ. பண்டறிசுட்டு. கடைந்து - கடைய. பாற்குடமுடைந்து பெருகிய தேக்கத்துக்குத் திருப்பாற்கடலும், மாமரத்தின் அடிக்கு மந்தரமலையும், மாவடியைச் சுற்றிப்பிணித்த முல்லைக்கொடிக்கு மந்தரமலையைச் சூழ்ந்து பிணித்த வாசுகியும், பாற்றேக்கத்துப் பொருநைநீர்ச்சுழியின் மாவடி சுழன்றுநின்றநிலைக்குத் திருப்பாற்கடலில் மந்தரஞ் சுழன்றுநின்றநிலையும், மாவினடியைச் சுழற்றிய பொருநைக்கு மந்தரத்தைச்சுழற்றிய திருமாலும், முல்லைக்கொடிகளிலுள்ள பூங்கொத்துக்களிலிருந்து தேன்பெருகுதலுக்குத் திருப்பாற்கடலில் அமுதமெழுதலும் உவமை.

69 பொருநைநீர்ப்பெருக்குக்கும் திருப்பாற்கடலுக்கும் சிலேடையுவமை. அமிழ்து பொருது, சுழித்தெறிதொகுதி என இயைக்க. அமிழ்து - (பொருநை) நீர். அறை - பாறை. மணி - மாணிக்கமும், சிந்தாமணியும்; தாரு - தரு - கோங்கு வேங்கை முதலியனவும் கற்பகமும். மரை - தாமரையும் பதுமநிதியும்; முதற்குறை. கபிலை - பசுவும் காமதேனுவும். நாகு - சங்கும் சங்கநிதியும். உயிர்த்த - வீசிய. பொருநைநீர்ப்பெருக்கின்மேற் சொல்லுங்கால் மணி - மாணிக்கம் முதலிய இரத்தினம்; தாரு - தரு - கோங்கும் வேங்கையும் முதலிய மரவிசேடம்; நறைமரை - தேனுள்ள தாமரை; கபிலை - பசு; நாகு - சங்கு: எனவும், திருப்பாற்கடலின்மேற்சொல்லுங்கால் மணி - சிந்தாமணி; தாரு - தரு - கற்பகம் முதலியன; நறை மரை - (தூபப்)புகையுடன்கூடிய பதுமநிதி (நிதியறைகளில் நறும்புகையூட்டல் வழக்கு). கபிலை - காமதேனு; நாகு - சங்கநிதி: எனவும் கொள்க.

70 மும்மைநூல் - நிர்குண்யவிஷயமான வேதாதி சாஸ்திரங்கள்; இருக்கு யஜுஸ் ஸாமம்: என்ற மூன்றுவேதம் எனவும், சுருதி ஸ்மிருதி இதிகாசம்: என்னும் மூன்றுநூல் எனவும் கொள்ளலாம். வீடு - மோக்ஷம். அவை - அம்மும்மைநூல்கள். மேய்தல் - வீட்டின்பத்தையனுபவித்தல். மானுவ - ஒப்பன. மூவினம் - பசு எருமை ஆடு: என்பன. தாழ்தரா என்பதைத் தாழ்தர எனத் திரிக்க; தாழ்தர - மூழ்கியழுந்த. அவை - அம்மூவினங்களின் அமிழ்தங்கள். உய்ப்பது - அடைவிப்பது. மூவினமும், தம்மினும் அமிர்திற் றாழ்தர, அவை உய்ம்மினென்று (அவற்றைத்) திடருருவின் உய்ப்பது, மும்மைநூலுணர்ந்துறுமுணர்வின் மூழ்கினோர் அவை மெய்ம்மை வீடுதர மேய்தல் மானுவ: என இயைக்க. மும்மைநூல் மூவினங்களுக்கும், மும்மைநூலுணர்ந்துறுமுணர்வு அம்மூவினங்களாலுண்டாகிய அமிர்துக்கும், அவ்வுணர்வின் மூழ்கினோர் தம்மினும் அமிர்தின்மூழ்கிய மூவினங்களுக்கும், அவ்வுணர்வால் அவர் வீடுபெறுதல் அவ்வமிர்தின் மூவினமும் திடர்சேர்தற்கும் உவமை.

71 நிதியசும்புடன் - பொன்னையொழுக்குவதோடு, வரை - மலை - குறிஞ்சி. நித்திலம் - முத்து. ஊர்தொறுய்ப்பதால் - ஊர்தோறும் தாங்கிக் கொண்டுசென்று சேர்த்தலால். தொறும் என்பதில் உம்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. நதியது - நதி, அது பகுதிப்பொருள்விகுதி. நாகம் - விண்ணுலகு - தேவருலகு. ஏய்க்கும் - ஒக்கும். 'நிதியசும்புடன் வரைமணிகள்...........மலர் புனலூர்தொறுய்ப்பதால், கற்பகம், நதியாய் நாகம்நீத்து மண்பதியாய்க் கொடைவளம் பயில்வதேய்க்கும்': என இயைக்க.

72 தரங்கம் - அலை. அலர் - பூ. உகுத்தல் - சிந்துதல். உரம் - வலிமை. அளித்தி - கருணைசெய்தி. உள்ளி - நினைந்து. கொம்பர் - கிளை. கரம் - கை. பனி - குளிர்ச்சி.

73 மள்ளர் கோன்பறையொடுத் துறைதொறும் பரந்தகாலை, அறை புனல், துறைதொறும் பழுதெணாச் சூழ்ச்சி மந்திரத்துறைபவருரையுணின் றொழுகும் மன்னன்போன்று அடங்கியொழுகியது: என இயைக்க. அறை புனல் - ஒலிக்கின்ற (பொருநை) நீர். மந்திரத்துறைபவருரையுணின் றொழுகும் மன்னன்போன்று - மந்திராலோசனைக்கழகத்து வீற்றிருக்கும் அமைச்சர்சொல்வழி தவறாதொழுகும் அரசன்போன்று. மள்ளர் - மருதநில மாக்கள். கோன்பறை - வலியபறை. இதனால் பொருநைநதி மருதநிலத்துப் புக்கசெய்தி கூறப்பட்டது. பொருநைநதிக்கு அரசனும் மள்ளர்க்கு அமைச்சரும் மள்ளர் பறையொலிக்கு அமைச்சர்கூறும் அறவுரைகளும் உவமை.

74 இதுமுதற் பொருநைநீர்ப்பெருக்கு நெய்தல்நிலத்துப்புக்க செய்தி கூறப்படுகிறது. மண்ணகமடந்தைதன்வரம்பை - பூமியாகிய பெண்ணின் எல்லையாகிய கடலை. வான்புனற் பெண்ணரசு - மழைநீராகிய (பொருநை நதியாகிய) பெண்ணரசானது. 'கடலை வான்புனற் பெண்ணரசு அழித்தது' என்று உலகம் பேசுவதாவது: 'மேகமானது கடல்வற்றப் பருகி யெழுந்ததென்று உலகத்தார் பேசுதலாம். இதனைக் 'கடல் குறைபடுத்த நீர்'* என்பதனாலும் அறியலாம். வான்புனற்பெண்ணரசு, (தன்னை) உலகம் மண்ணகமடந்தைதன் வரம்பையழித்ததென்று பேசுமாறெண்ணித் தானுண்ணு நீர்க்கடலையும் உண்ட அளவினுக்கார்த்தியாய் உததிக்கு எங்கும் ஈந்தது: என இயைக்க. ஆர்த்தி - நிறைவு - மிகுதி. உண்ணுநீர்க்கடன் என்பது (வான் தான்) உண்ட (உவர்) நீர்க்கடன் எனவும், உண்ணத்தக்க (இனிய) நீர்க்கடன் எனவும் பொருள்கொள்ளநின்றது. உததி - கடல். எங்கும் ஈந்ததென்றது மேகம் கடலில் ஓரிடத்துப்புக்குப் பருகியநீரைப் பலமுகத்தாலும் உதவியது என்றபடி.

---

* பரிபாடல் 20. அடி. 1

75 மாநதி - பெரியநதி(யாகிய பொருநை). புணரி - கடல். ஒக்க - ஒருங்கு. உததிநாயகன் மிக்கநாயகி யென் - கடலரசனாகிய வருணனுடைய மேம்பட்ட நாயகியென்று. வருணனை நாயகனாகவும் நதியை நாயகியாகவும் கூறுதல் வழக்கு. திரைக்கரத்து - அலைகளாகிய கைகளால்.

76 மாநதி - சிறந்தஆறு - பொருநைநதி. புக - (கடலினுள்) பிரவேசிக்க. வெண்டிரை - கடல்; ஆகுபெயர்.

77 கடிதொடும் - நறுநாற்றம் அமைந்த. காமர் - அழகிய. தென் மலை - பொதியம். தென்மலைப்படிதொடுத்து - பொதியச்சாரலிற்றொடங்கி. அலைதொடும் - கடல்வரை பரவிய. அலை - கடல், ஆகுபெயர். பாணி - நீர் மடி - சேலை. இலகிய - விளங்கிய. மானும் - ஒக்கும். பொதியிலிற்றொடங்கிக் கடல்வரை பரந்த பொருநைநதிப்பெருக்கு, பூமிதேவியின் முடியிற் றொடுத் தணிந்த முல்லைமாலை அவளுடைய இடையிற்றரித்த உடைவரை தொடுத்து விளங்கும் அழகையொக்கும் என்றபடி. பாணி மானும்: என இயைத்து முடிவுகொள்க.

78 இதுமுதல் மருதநிலவளம் கூறப்படுகிறது. மிடைதிறந்தரும் அரவிந்தநாண்மலர் - நெருங்கும்பான்மையுடைய அப்பொழுதலர்ந்த தாமரைமலர்கள். புடை - பக்கம். மலர்ப்பூவை - இலக்குமி. கடை - கதவு. பொருநைநீர் வாவியிற்புகத் தாமரை மலர்ந்ததோற்றம், இலக்குமி நீர்த் தெய்வத்தை எதிர்கொள்ளநினைந்து கடைதிறந்துநின்றதுபோலும் என்றபடி.

79 வாளைப்பகடு - வாளைமீனேறு. வாய்மடுத்து - உண்டு. மடு - ஆற்றிடை யாழமான நீர்நிலை. மதர்த்து - களித்து. மடையாள் - மடையன் - நீர்ப்பாய்ச்சி. சினவி - சினந்து. உகளித்து - துள்ளி. அழி - சிந்துகின்ற. மணிமிடற்று - அழகிய கழுத்திலுள்ள. பசுங்காய் - பாக்கு. தருவின்முதற் றாள் - தருவின் தாள்முதல் - கற்பகத்தின் அடிமரத்தை. தடிந்து - குறைத்து. அம்பரநதி - ஆகாயகங்கை. வாளைப்பகடு மடுத்து, மதர்த்து, சினவி, வாலறைந்து, உகளித்து, சிதறி, தடிந்து, குளிக்கும்: என முடிக்க.

80 கனல்காலம் (வெம்மையைச் செய்கின்ற) வேனிற்காலம். எதிர் கோலி - வருங்காலத்திற் செய்யவேண்டியதைச் சூழ்ந்து. கணிதர் - சோதிடர். ஏர்காலம் - பொருந்திய காலத்தை. செய் - வயல். நீர்கால - நீர்வடிய. முளைகாலுதல் - முளைக்கொள்ளல். வேர் - வியர்வை. கழனி - வயல். உழவர் எதிர்கோலி, நினைந்து, கண்டு, கழனிதொறுங் குழீஇ, மேயினர்: என முடிக்க.

81 மருந்தெனும் - (அமுதம்போற் பெறற்கு) அரிதென்று சொல்லத் தக்க. வாய்மை - சத்தியம். குலன் - குலம். வனப்பு - அழகு. எஞ்சா - குறைபடாத. குப்பைக்குவிக்குட் புண்ணியத்தின்தொகுதி உவமம்.

82 கொழுப்படை - கலப்பை. நுதி - நுனி. நுகத்துளையுட் செறித்த கழிகோல் - நுகத்துளையிற் பூட்டப்பட்ட தும்புகளையுடைய மேக்கால். ஏர் - உழவுமாடு. விழுப்பிடரில் - சிறந்த பிடரினிடத்து. பிணித்து - (தும்பு) பூட்டி. குலிசன் - இந்திரன். எழு - தூண். முழுப்பு - உழவர் சால்திருப்புமிடத்து வலவனைத்திருப்ப உச்சரிக்கும் ஒலியைக்குறிக்கும் சொல். எழுப் புணரும் திரண்டபுயத்திளையார்கள் நுகத்துளையுட் செறித்த கழிகோலை ஏரின்விழுப்பிடரிற் பிணித்து, வேண்டி, ஈண்டி, கொழுப்படையினுதிக் கொழுவின் விளையாட்டின் உழும் தொகுதி: என இயைக்க.

83 மேதி - எருமை. மேதி, குறுக்கி உண்டு ஒழுக்கும் பால்: என இயைக்க.

84 உழவர்க்கும் வீரர்க்கும் சிலேடை. உழவர்மேற் சொல்லுங்கால் பகடு - எருமைக்கடா. சங்கு - நந்து. மாறுபடப் படர் முல்லைக்கொடிப் படை பின் அணி ஆம்பல் - மாறுபடப்படர்ந்துள்ள முல்லைக்கொடியின் வரிசையொடு பின்னிக்கிடக்கிற அழகிய ஆம்பலினையும்; மதமாவாகம் கீறும் முடக்குகிர் உழுவைப் பேர் அணி - மதயானையினுடலைக் கிழிக்கும் வளைந்த நகத்தையுடைய உழுவையென்னும் மீனின் பெரிய அணியையும்; அம் புரவு அலர் தாள் கிளர - அழகிய புரத்தற் றொழில்மிக்க (பகட்டின்) அடி கிண்ட. படைவாளின் - கலப்பையால்; சேறுபட - கருஞ்சேறுபடும்படி: எனவும், வீரர்மேற்சொல்லுங்கால், பகடு களிற்றியானை; சங்கு - சங்கம். மாறு படப்படர்முல்லைக் கொடிப்படை - பகைத்தெழுந்த வெற்றியையுடைய முற் படையினையும்; பின்னணியாம் பன் மதமாவாகம் கீறும் முடக்குகிர் உழுவைப் பேரணி - பிற்படையாகிய பல மதயானைகளின் உடலையும் கிழிக்கும் வளைந்த நகத்தையுடைய புலிக்(குழாமன்ன வீரர்பெருங்) குழுவினையும்; அம்புரவலர் தாள்கிளர - அழகிய அரசர் முயற்சி மேம்படுமாறு; சேறுபட - செஞ்சேறுறும்படி; படைவாளின் - வாளாயுதத்தால்: எனவும் பொருள்கொள்ள நின்றது. அன்றி, உழவர்மேற் சொல்லுமிடத்து மதமாவாகம் கீறும் முடக்குகிர் உழுவைப்பேரணி - மதயானையின் உடலைக்கிழிக்கும் வளைந்த நகத்தையுடைய புலியின் பெயர்பூண்ட (புண்டரீகம் என்னும் பெயரையுடைய); அம்பு உரவு அலர் - நீரில் மிக்குள்ள புஷ்பங்களையும்; தாள் கிளர - (ஏரிற் பூட்டிய பகட்டின்) அடி கிண்ட: எனினும் ஆம். இதனுள் முல்லைநிலத்துக்குரிய முல்லைக்கொடி மருதநிலத்து ஆம்பற்கொடியொடு பின்னிக்கிடப்பதாகக் கூறியது திணைமயக்கம். வீரர்மேற் சொல்லுமிடத்து உழுவைப் பேரணியென்றது உருவகவாய்பாடுபற்றி வந்தது. செறுவுழுநர் வயலுழுவார். வீறு - பெருமை. பணை - பருத்த. மருப்பு - கொம்பு. கடாய் - செலுத்தி. இருபுடையும் - இருபக்கமும். ஆர்ப்ப - முழங்க. செருச்செய்கை- போர்த்தொழில். திளைத்தல் - பயிலுதல். செறுவுழுநர், நாளும் பகடுகடாய்,

வெண்சங்கார்ப்ப, தாள் கிளர, சேறுபட, படைவாளின் செருச்செய்கை திளைப்பர்: என இயைக்க. அன்று ஏ அசைநிலை.

85 திரையாடை - கடலாகிய ஆடை; திரை - கடல், ஆகுபெயர். அரை - இடை. தரையாள்தன் - பூமிதேவியினுடைய. செய் - வயல். உரையாரும் - புகழ்மிக்க. களபம் - கலவைச்சந்தனம். தொளி - சேறு. சமைந்த - பக்குவமான - அழகிய. உறைதல் - இறுகுதல். நிரை - வரிசை. விரை - நறுமணம். வித்து - விதை. ஆங்கு - அசை. வித்தினை இருதிறத்தால் வித்துதலாவது (விதைவிழாத வெற்றிடமில்லாதபடி நேர்வீச்சும் குறுக்கு வீச்சுமாகிய) இருவகையால் விதைத்தல். அன்றி ஒருமுறை விதைத்து வேற்றிடம்படாதபடி மேல்விதை விதைத்தலுமாம்.

86 மொய்தவா - வலிகெடாத. தமக்கு அமைத்த முயற்சியால் - தமக்கு வகுத்த தொழிலால். ஊதியம் - இலாபம். பயத்தல் - கொடுத்தல். எவன் - எப்படி. என முன்னி - என்று (சிந்தித்து). சிதையாச்செல்வம் - அழியாதசெல்வம். வானவர் - தேவர். மறையோர் - பார்ப்பார். குரவர் - குருக்கள். துப்புரவு ஒன்றிலர் - உணவு ஒன்றுமில்லாதவர். முன்னி - நினைந்து. பெய்தவாறென - (தாம் முன்செய்த பொருளைக்) கொடுத்தவாறு போல. கழனி - வயல். பெய்தல் - சிதறுதல். உழவர்முதுகுடிப்பிறந்தோர், தமக்கமைத்த முயற்சியால் தாம் முன்செய்தபொருள்கள் அழியாது நிலைத்திருந்து இலாபந்தருமாறெவ்வாறென்று (சிந்தித்து) அழியாத செல்வம் அடையும்பொருட்டுத் தேவரும் மறையோரும் குரவரும் ஒருதுப்புரவும் இல்லாதவருமாகிய இவரிடத்துப் பெய்தவாறுபோலத் தழைத்த நாற்றினைப் பறித்து வயலேறும் சிதறினர்: என்றபடி.

87 கடைசியர் - மள்ளப்பெண்கள். பொன்மலை - (பொன்மலை போலும்) தனம், உவமவாகுபெயர். மருங்குலாய மெய்வளையுந் திறத்தினில் - இடையாகிய உறுப்பு வளையும்படி. சூல் - கரு. காலுதல் - ஈனுதல். வளை - நத்து. கைவளை கால்வளையெனச் சொன்முரண்டோன்றநின்றவாறு காண்க. நண்பூண் என்றிருப்பது நன்பூண் என்றிருக்கவேண்டும். நன்பூண்பெய் வளையார்திறத்து - நல்ல அணிகளைத்தந்த சங்கின்மாட்டு. பெற்றி - தன்மை. கடைசியர் நடுதன்மேயகாலை அவர்தம் கைவளையும் அவர்காலால் மிதிபட்ட சூல்வளையும் கதறுவது, (அவை கடைசியரைநோக்கி) உங்களுடைய கைக்கு நல்ல வளையணியுதவிய சங்கின்மாட்டு நீங்கள் நன்றியறிவுடையராயொழுகுவது இவ்வாறோ? என்னும் தன்மைத்து: என்றபடி. சங்கங்களை அறுத்து அமைத்த வளைகளை மகளிரணிதல் வழக்கு.

88 வகிர்ந்து - பிரித்து. தொடை - மாலை. ஓதி - கூந்தல். பிடர் - பிடரி. சுவடு - இரட்டை. இணைவிழி - இரண்டுகண். உள்ளப்படை - மனமாகிய மதிலடுக்கு. குரவையெழீஇ - (நாவாலெழுப்பும்) குரவையென்னும்

ஒருவகையொலியைச்செய்து. பாரித்தல் - பரப்புதல். தொடைகுழையப் பிடர்குழைய இடைகுழைய நடைகுழையக் கடைசியர் நின்றநிலை அவரன்பர் கண்ணையும் கருத்தையும் குழைவிப்பதாயிற்று.

89 நலம் - நன்மை. தலைப்படல் - எய்துதல். குலம் - கூட்டம். கொழுநர் - கணவர். அலம் - கலப்பை. தலைப்பட்டிட-தன்னிடத்துத்தாக்கும் படி. புண்பாடு - வருத்தம். அவனிமாதை - பூமியாகியபெண்ணை. வலந்து - சொல்லி. அலைப்பட்டு - வருந்தி. அறுகின்காப்பணிந்து - அறுகினாற்செய்யுங் காப்பைச் செய்து. கடைசியர் வயல்தொறும் நடுந்தோறும் குரவையொலி யெழுப்பி நடுதல், அவர்கணவர் பூமிதேவியின்மார்பிற் கலப்பையாலுழுத புண்பாட்டைப்பொறுத்தியென்று பூமிதேவியை அறுகின்காப்பணிந்து பணிந்தேத்துதல்போலும் என்றபடி. கடைசியர், நடுந்தொறும் முழக்குங் குரவையினுக்கு இணைகூறின் (அவர்) கொழுநர்கூடி அலந்தலைப்பட்டிடவுழுத புண்பாட்டைப் பொறுத்தியென வலந்து, அலந்தலைப்பட்டு, அறுகிதழின் காப்பணிந்து பணிந்து அவனிமாதை ஏத்தும் வாய்மைபோலும்: என இயைக்க.

90 கால் உகள - கால்பிறழும்படி. கடைகுழையும் - தோகை மடங்கியுள்ள (செழித்த). பைங்கூழ் - பயிர். களைகளையும் - களைபறிக்கின்ற. கடைசிமார் - மள்ளப்பெண்டிர். வைவேல் உகளும் மதர்நெடுங்கட்கு - கூரிய வேலையொத்த பிறழ்கின்ற களிப்புடைய நீண்டகண்ணுக்கு. வைவேற்கண் உகளுங் கண் மதர்த்தகண், நெடுங்கண் என இயைக்க. இணை - ஒப்பு. சேல் உகள - கயல்பிறழ. உகளும் - சிந்துகிற. தெண்ணறவம் - தெளிந்ததேன். செறு - வயல். நாப்பண் - நடு. புழை - மடை. பார்ப்பு - அன்னத்தின்குஞ்சு. கடைசியர், கால்பிறழும்படி பயிரிற் களைபறிக்குங்கால் அவர்கண்ணுக்குத்தோற்ற கயன்மீன்பாய்தலாற் கிழிந்த குவளை சிந்திய தேனை மடையிலுள்ள பேடையன்னம் தன்குஞ்சுக்கு ஊட்டும் சிறப்புடையதென்றபடி.

91 பள்ளவாய்ச்சுரிசங்கம் - கடலிலுள்ள புரியுடைய சங்கு. மேதி - எருமை. கவடுபடுபணைத்தாள் - கவர்த்த (குளம்புடைய) பருத்தகால். அகடு-வயிறு - வேழமுத்து - மூங்கிலிலிருந்துபிறந்த முத்துக்கள்; யானைக்கோட்டிலிருந்துபிறந்த முத்துமாம். கணித்து - எண்ணி. கொற்று - கூலி. அள்ளலாட்டிய - சேறுசெய்த. (தொளியடித்த). துழனி - ஆரவாரம். செறு-வயல். முகவை - நாழி. கடற்சங்கீன்ற முத்தும், வேழமுத்தும் ஆகியவற்றை வயலுழவர் களைபறித்தமகளிர்க்குக் கூலியாக அளப்பர் என்றபடி. அன்று, ஏ: அசை.

92 வழுக்காது - தவறாமல். மறத்தின்வழி - வீரத்துறை. செறு நரைத்தேய்த்து - பகைவரையழித்து. முக்குடி - அந்தணரும் வணிகரும் வேளாளரும். பொதிப்புறம் - பொதியில். மூன்றுவகைப்பைங்கூழ் - முப் போகப்பயிர்கள். அரசன்-பொதியிலுக்கும் அவனைச்சார்ந்த முக்குடிகளும் பொதியிலைச்சார்ந்த (மருதநிலத்து) முப்போகப்பயிருக்கும், அரசனருள் மழைக்கும், அரசனருளால் முக்குடிகளும் தழைத்தல் பொதியச்சாரலிற் பெய்த மழையால் முப்போகப்பயிரும் தழைத்தற்கும் உவமை. பொதிப் புறஞ்சார் மூன்றுவகைப்பைங்கூழ் என்பதற்குக் கருவெளிப்பட்ட முப்போகப்பயிரும் எனினு மமையும். முப்போகமாவன: காலம் கோடை இடைகுருவை என்பன.

93 சதிர் - திறம். புனிதரடித்துகள் - பரிசுத்தராகிய தொண்டரடிப் பொடி - ஸ்ரீபாததூளி. பாசடை - பசியதோகை. தொண்டரடிப்பொடியை முடிமீது பொறுத்த சிறந்த ஞானிகளான சான்றோருடைய உள்ளத்திலே கருணாமூர்த்தியான திருமால் செறிந்துவிளங்கல்போல மாரியின் குறுந் திவலையால் பொதியவிழ்ந்து வெளிப்பட்ட கதிரினிடத்துப் பரந்த பாலானது மணியாய்முற்றிக் காய்த்தது என்றபடி. மேகத்துக்குப் புனிதரும், குறுந் திவலைக்குப் புனிதரடித்துகளும், குறுந்திவலை தோய்ந்த தோகையையுடைய பயிர்க்கு, அடித்துகள் படிந்த முடியையுடைய தக்காரும், குறுந்திவலை தோய்ந்த பயிரீன்ற கதிர் பாலேறி முழுமணியாய் விளைந்தமைக்குப் புனித ரடித்துகள்பொறுத்த முடியுடைத் தக்கார் ஞானதிகராய்க் கருமாமணியாய் திருமாமகள்கொழுநனைத் தம்மகத்துப் பெற்றுவிளங்குதலும் உவமை.

94 சிலை - வில். வணக்குதல் - தலைகவிழச்செய்தல். சிலைவணக்குந் திருநுதலார் என்றது வில்லினுஞ்சிறந்த புருவத்தையுடைய மகளிர் என்ற படி. முதுக்குறை - பருவமுதிர்ச்சி; அறிவுமுதிர்ச்சியுமாம். பொறைமுதிர - (கதிர்) கனம் மிக. தலைவணக்கங்கொண்டு - தலைவணங்கி. கதிர், முதுக் குறைவந்தடைந்து பொறைமுதிர நோன்தாள் நிலைவணக்கங் கொண்டது கண்டு, சிலைவணக்குந் திருநுதலார்முலை, முதுக்குறைவந்தடைந்து பொறை முதிரச் சிற்றிடையை வணக்கிய அச்சிறுமைநோக்கி வணக்கஞ்செய்தது போல் நிலமகட்கே சரணமெனச் சாய்ந்தது எனக் கூட்டுக. அன்று ஏ அசை. முதுக்குறைவந்தடைந்து பொறைமுதிர என்பது மத்திபதீபமாய்நின்று முலை யொடும் கதிரொடும் இயைந்தது. மகளிர்முலைகள் பருத்துத் தம்மைத் தாங்கிய இடையை வருத்தியதையறிந்து தலைவணங்கியதுபோல நெற்கதிர் களும் தம்மையீன்ற தாள் தம் கனத்தால் தளர்ந்து வருந்துதலறிந்து தலை வணங்கி நிலத்திற் சாய்ந்தன: என்றபடி.